


ஆஸ்கார் ஒயில்டு

# சலோம்

தமிழாக்கம்

க. கோவேந்தன்

# சலோம்

(உலகில் சிறந்த ஓரங்க நாடகம்)

## ஆசுகார் ஒயில்ட்டு

*மொழியாக்கம் :*

**த. கோவேந்தன்**


வேந்தன் வெளியீடு

18, வேம்புலி அம்மன் கோவில் தெரு,

நந்தம்பாக்கம், சென்னை - 600 089.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சலோம் |
| ஆசிரியர் | : | ஆசுகார் ஒயில்ட்டு |
| மொழி | : | தமிழ் |
| தமிழாக்கம் | : | த. கோவேந்தன் |
| பொருள் | : | நாடகம் |
| உரிமை | : | த. சித்திரா |
| முதற் பதிப்பு | : | 21.6.1998 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 80 |
| கட்டமைப்பு | : | வல்லட்டை |
| விலை | : | உருபா 17/- |
| நூல் வெளியீடு | : | வேந்தன் வெளியீடு<br>18, வேம்புலி அம்மன் கோவில் தெரு,<br>நந்தம்பாக்கம், சென்னை - 89. |
| ஓவியம் | : | இரவி |
| ஒளியச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை-600 030. |
| அச்சிட்டோர் | : | மலர் பிரிண்டர்ஸ் 044-8224803 |

# அணிந்துரை

'சலோம்' ஓர் ஒற்றையங்க சோக நாடகம். ஐரிஷ் 'கவிஞர்' ஆஸ்கார் ஒயில்ட்டு 1891-இல் இந்த நாடகத்தை எழுதினார்; 1893இல் புத்தகமாக வெளிவந்தது.

ஆஸ்கார் ஒயில்ட்டு பிரெஞ்சு மொழியில் இதை எழுதினார்; பாரிஸ் நாடக அரங்கில் நடிக்கப்பட்டபோது, ஏராளமான கூட்டம் வந்தது. பிரெஞ்சுக்காரர்களிடையே இந்த நாடகம் பெரும் புகழ்பெற்றது.

பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் லார்டு ஆல்பிரெட் டக்லஸ் மிக நுட்பமாகவே மொழி பெயர்த்திருக்கிறார். ஒரு மொழி மின்சாரமாகவே சுழல்கிறது, இந்த நாடக நடை; உணர்ச்சிச் சூறாவளியாகவே அமைந்திருக்கிறது. இந்த நாடகப் போக்கு, 'சலோம்' என்ற பெண்ணின் நிகரற்ற அழகும், மோகமும், அரசனின் காம வெறியும், இராணியின் இதயப் புரட்சியும், பெண்மையின் ஆழ்ந்த சௌந்தரியத்திலும், லீலையிலும் மதி மயங்கி மடியும் ஆண்களின் மனத்துடிப்பும், இதில் மின்சார வேகத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. படிக்கவும் நடிக்கவும் ஏற்ற சிறந்த சோக நாடகம் இது. கவிஞன் ஷெல்லி எழுதியிருக்கும் 'செஞ்சி' நாடகம் போன்றது.

பாத்திரங்களின் சோகக்குரல், புகைந்து படர்ந்து நமது உள்ளத்தில், தீயுமிழ்கிறது. ஞானியின் வெட்டிய தலையையே முத்தமிடும் சலோமின் மனப்பான்மை, சோகக் கலையின் இதயத்தில் ஓர் ஓங்கிய சிலையாகவே மின்னிக் கொண்டிருக்கும்.

கவிஞர். த. கோவேந்தன், மூலத்தின் ஒளி மங்காமல் இனிய எளிய சரளமான தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். எல்லோரும் படித்து இன்புறுவோமாக.

21.6.64 வி.ஆர்.எம்.செட்டியார்

# ஆஸ்கார் ஒயில்ட்டு

## ஓர் அறிமுகம்

ஆஸ்கார் ஒயில்ட்டு சிறந்த எழுத்தாளர். 1856-இல் பிறந்து 1900-இல் மறைந்தார். 44 வருஷங்களில், அவர் எழுத்திலே இலக்கிய மின்சாரத்தைச் சிருஷ்டி செய்தவர்.

இவர் ஐரிஷ்காரர்; கவிஞர், நாவலாசிரியர், நாடகாசிரியர், கட்டுரையாளர், ஆராய்ச்சி மன்னர், சிந்தனை ஓவியர்.

இவருடைய ஆங்கில வசனம், எதிர்பாராத வனப்புடன், தந்தச் சிற்பமாகவே உதயமாகிறது. மொழியை ஒரு கலைக் கோயிலாகவே கட்டியிருக்கிறார். ஆழ்ந்த கருத்துகளை நடையின் சுடரிலே விளக்கும் அபூர்வ ஆற்றலுடையவர்; இவரைப்போல் எழுத முடியாது. இவருடைய நூல்களை மூலகதியுடன் மொழி பெயர்ப்பதும் கஷ்டம்.

இவர் டப்ளின் நகரத்து டிரினிடி கலாசாலையிலும், ஆக்ஸ்போர்ட் மாக்டலின் கலாசாலையிலும் கல்வி பயின்றவர்.

1895-இல் இவர் சிறைவாசம் செய்ய நேர்ந்தது. சிறையிலே இவர் பல நூல்களை இயற்றியுள்ளார்.

லண்டன், பாரிஸ், ஆக்ஸ்போர்ட் வாழ்க்கையில் ஊறிக் கிடந்தவர், ஒயில்ட்.

அமெரிக்காவிலும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக் கிறார்.

ஆஸ்கார் ஒயில்ட்டு ஆங்கிலத்தில் எழுதிய நூல் "De Profundis" அருமையான சிறப்பு வாய்ந்தது; ஒயில்டின் சிறை அனுப வம்தான், இதில் தத்துவ விளக்கமாகவும் வாழ்க்கையின் விமர்சன மாகவும், இலக்கிய ரசனையாகவும் அமைந்திருக்கிறது. ''துன்பம் உடல், இன்பம் ஆன்மா'' என்பதை மிக ஆழமாகப் பரிசீலனை

செய்திருக்கிறார். சிற்றின்பத்தால் சீரழிவதைவிட, பேரின்பத்தால் பேருண்மைகளை அறிய முயல்வது சாலச் சிறந்தது என்பதை ஒயில்ட்டு மிக ஆழமாக வற்புறுத்துகிறார். ஒவ்வொரு தமிழனும் வாங்கிப் படிக்க வேண்டிய அரிய நூல், ஆஸ்கார் ஒயில்டின் ''சிறை அனுபவம்''.

ஆங்கில வசனத்தை இவ்வளவு கூர்மையாக, இவ்வளவு லாகவமாக வேறு யாராலும் கையாள முடியாது. 'பெர்னார்ட்ஷா' வின் வசனம் கூட இவ்வளவு கூர்மையாக, இலக்கிய ஜிலுஜிலுப் போடு அமையவில்லை. தந்தத் தகட்டில் சித்திரம் எழுதுவது போல், ஒயில்ட்டு பாஷையைக் கையாளுகிறார்: சிந்தனைச் சித்திரமாகவே சிங்காரமாக சிறப்போடு நேரே நின்று பேசுகிறது. அகராதியில் உள்ள எளிய சொற்கள் எல்லாம், ஆஸ்கார் ஒயில்டின் கைவண்ணத்தால், உயிரோவியமாகவே மாறிவிடுகின்றன.

சிறை அனுபவம் (De Profundis) என்ற நூலில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் :

''கலையின் மர்மம், வாழ்வின் மர்மம், இயற்கையின் மர்மம்'', இவைகளையே நான் தேடி அலைகிறேன்.

''சந்தோஷம், சிரிப்பு இவற்றினுள் கொடிய மனநிலைகள் பதுங்கி வளரலாம்; ஆனால் துக்கத்தினுள் துக்கம்தான் வளரும். சுகம், இன்பம், மூடித் திரையிட்டிருக்கலாம்; ஆனால் துன்பத்திற்குத் திரையில்லை, முகமூடியில்லை. கலையின் உண்மை வெளித் தோற்றத்தில் அவசரமாய் நிகழ்வதல்ல; ரூபத்தின் சாயை போன்ற நிழலல்ல; கல்லில் உறையும் தோற்றமல்ல; ஒரு மலைக் குகையினின்று வருகின்ற எதிரொலியல்ல; சந்திரனைச் சந்திரனுக்குப் பிரதிபலிக்கும் வெள்ளிக் கிணறுமல்ல; பூவைப் பூவுக்குக் காட்டும் நீர் நிலையுமல்ல; ஆனால் தன்னுள் ஐக்கியமடையும் நிலையே, கலையின் உண்மைநிலை. ஆத்ம நிலையமாகவே துன்ப உடல் மாறிவிடுகிறது; கலையே குணத்தின் வசீகர

வெளியீடு. சில சமயங்களில் துக்கம்தான் ஓர் ஒப்பற்ற உண்மை என்று உணர்கிறோம். மற்றவைகளெல்லாம் கண்ணிற்பட்டு மறையும் பொய்த் தோற்றங்களேயாம். பசியிலே தோன்றி மறையும் பொய்க் கூற்றுகள்.

''ஆனால் துக்க மேடையிலேதான் உலகம் கட்டப்பட்டிருக் கிறது; ஒரு குழந்தை பிறந்தாலும், ஒரு நட்சத்திரம் ஜனித்தாலும் அங்கே துக்கம் தீவிரமாக எழுகின்றதல்லவா?''

ஆஸ்கார் ஒயில்டின் கதைகள் சிறந்த சிறுகதைகள். வாழ்க்கையின் விசித்திர அந்தரங்கத்திலே சிறந்த நீதிகளை வைத்துப் பின்னி எழுத வேறு ஒருவராலும், இந்த உயரத்துக்கு இலக்கியத் துறையிலே வரமுடியாதுதான். ''நட்சத்திர குழந்தை'' ''கடல் கன்னி'' எவ்வளவு அருமையான கதைகள்! பாஷை மின்ன லோவியமாகவே பல வர்ணச் சித்திரங்களாகவே, காட்சி யளிக்கிறது.

Picture of Dorian Gray அவருடைய மிகச் சிறந்த நாவல்; நிக ரற்ற பாஷை. நிகரற்ற சிந்தனை சிருஷ்டி எழில்வாய்ந்த வாழ்க்கைச் சிற்பம்; தமிழில் என் நண்பர் ஒருவர் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறார். விரைவில் வெளிவரும், ஆங்கில பாஷையை ஒரு தந்தக் கோயிலாகவே ஆஸ்கார் ஒயில்ட்டு ஆர்வத் தோடு சிருஷ்டி செய்திருக்கிறார்.

அவருடைய நாடகங்கள், தனி இன்பம் கொண்டவை; பெண்களின் சாகசத்தையும், மனநிலைகளையும் மிக நுட்பமாகச் சித்திரித்திருக்கிறார். பெண்களின் பேச்சு தத்ரூபமாகவே இயற்கை யாகவே அமைந்திருக்கிறது. ஒயில்டின் ஆங்கிலச் சொற்கள். பெண்களின் கண்களைப்போல அருமையான இன்ப ஜாலங்களை அள்ளி இறைக்கின்றன. 'சலோம்' அருமையான நாடகம். நாடகம் அனைத்தும் கவிதையின் எழிலோடு பரிமளிக்கின்றது. சுந்தரி சலோமியின் நடனமும், பேச்சும், சபதமும், காதல் வெறியும் மிக மிக அருமையாகத் தீட்டப்பட்டிருக்கின்றன.

ஒயில்டின் கட்டுரைகளும் இலக்கிய விமர்சனமும் புது முறையிலே அமைந்திருக்கின்றன. மிக நுட்பமான கருத்துகள், அருமையான நிகரற்ற நடையிலே பவனி வருகின்றன. கற்பனையின் எழிலும் ஆவேசமும் அந்தரங்கமும் புதிய பாணி யிலே, சிருஷ்டி எழிலோடு புரண்டோடுகின்றன. கூரியசொற்கள்! கலைக் கூர்மையோடு கவர்ந்திடுகின்றன, ஆம்!

''பெண் உலகம்'' பத்திரிகைக்கு நீண்ட நாள் ஆசிரியராக இருந்து, பெண்களைப் பற்றிப் பிரமாதமான ஆராய்ச்சிகள் செய்தி ருக்கிறார். அவருடைய எழுத்தெல்லாம் வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் ஆழ்ந்த உண்மைகளை விளக்கும் ஆற்ற லோடும் அமைந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலே ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்றும், சிந்தனையிலும், நடையிலும் சிருஷ்டி எழில் வளர வேண்டும் என்றும், யாரும் பிறருடைய கருத்துகளைத் திருடி வழங்கக் கூடாது என்றும் ஒயில்ட்டு வற்புறுத்துகிறார். 'ஈ அடித்தான் காப்பிக்கு நேர் விரோதி ஆஸ்கார் ஒயில்ட்டு. காப்பியடிப்பதே கலையின் வளர்ச்சிக்கு விரோத மென்றும், பாராமல் படித்து வாந்தி எடுப்பது கலையல்ல என்றும், அருமையாக போராடுவார் நமது கலைச் சிற்பி ஆஸ்கார் ஒயில்ட்டு.

"The Critic as Artist" என்ற ஆராய்ச்சிக் கட்டுரை மிக அருமையான கட்டுரை; சிறந்த இலக்கிய விமர்ச்சனம்.

கலையைப் பற்றி ஆஸ்கார் ஒயில்ட்டு என்ன சொல்லு கிறார்? கலைஞன் உள்ளத்தினின்று உதயமாவதே கலை. இயற் கையையும் வெளி நிகழ்ச்சிகளையும், பார்த்துக் காப்பியடிப்பது கலையல்ல! கவிதையும், கவிஞன் உள்ளத்தினின்று பீறிட்டுக் கொண்டு வெளிவரும் அற்புத சிருஷ்டியாகும்; கற்பனை உல கிலே சஞ்சாரம் செய்யும் கலைஞனும், கவிஞனும் பித்துப் பிடித்

தவர்கள் போலவே, அற்புதங்களையே சிருஷ்டித்து விடு கி றார்கள். ஷேக்ஸ்பியர் எழுதிய கலையோவியங்களான, ''ஹாம்லட்'', ரோமியோ ஜூலியட்'' நாடகங்களும் அவ்விதமே பிறந்திருக்கின்றன. கலையும் கவிதையும் உலகளாவியது; காலத் தையும் மீறி உயர்ந்து பறப்பது கலை.

கலைஞன் அழகையே சிருஷ்டிக்கிறான்; கலைஞன் திற மையை, ஒரு விமர்சகன் தான் நன்கு உணர்ந்து வேறு அனுபவித்த பாஷையிலே மிக அழகாக எடுத்துரைக்கின்றான். கலைஞனை, விமர்சகன் அருமையாக, மிக ஆழமாகச் சிருஷ்டி எழிலோடு மொழி பெயர்க்கின்றான். விமர்சனம், சுயசரிதையின் எழிலோவி யமாகவே உதயமாகிறது.

அழகின் அருமையை உணராமல், அதிலே குற்றம் கண்டு பிடிக்க முயல்வது அறிவீனம். இது ஒரு பெரும் பிழை.

அழகின் சிருஷ்டி எழிலிலே அழகின் அருமையைக் காண்பவர்கள் பயிற்சி பெற்ற ஞான மேதைகள்.

கலைஞன் எதையும் ஆவேசத்தோடு ருஜூச் செய்ய முன் வருபனவல்லவே! கலைஞன் கலைக் கண்ணோடு கலையையே தேடுகிறான். அவன் வேறு எதையும் விரும்பமாட்டான். கலைஞன், தன் மனோபாவ விரிவால் எதையும் ஆழமாகச் சித்த ரித்துக் காட்ட முடியும். அவனுடைய கலா சிருஷ்டியிலே, மனிதப் பண்பும், ஹிருதய பாவமும் மண்டிக் கிடக்கும்.

கலைஞனுக்குச் சிந்தனையும், பாஷையும் அரிய துணை யாக அமையும் கருவிகளேயாம். பாவம், புண்ணியம், இரண்டும் கூட கலையிலே கலக்க வேண்டிய பண்டங்களாகவே வந்து விடுகின்றன.

கலையின் வெளியீடுகளைப் பற்றி பலரும் பலவிதமான அபிப்பிராயங்கள் கூறினால், அந்தக் கலா சிருஷ்டி புதிதென்றும்,

உயிரோவியமான தன்மையுடையதென்றும், அசாதாரண அமைப்பைக் கொண்டதென்றும்தான் பொருள்.

கலைஞனைப் பற்றி விமர்சகர்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தாலும், கலைஞன் உள்ளம் உறுதியாகவே தன் கலை உள்ளத்தோடு ஒன்றியே நிற்கும்.

வாழ்க்கையை விரிவாக்குவதே கலை; வாழ்க்கையைக் காப்பியடிப்பது கலையல்ல; வாழ்க்கையைவிட கலையின் விஸ்தீரணம் அதிகம்; கற்பனை உலகம் அகண்ட சக்தி வாய்ந்தது; அபூர்வமான உலகம் அகண்ட சக்தி வாய்ந்தது; அபூர்வமான வில்லங்கமான சந்தர்ப்பங்களில், கலையே வாழ்க்கைக்கு வழி காட்டியாக; ஒளிப்பந்தமாக முன்வந்து நிற்கிறது. இதை யாரும் ஆட்சேபிக்கவே முடியாதல்லவா?

''சலோம்'', குமரியின் நகை ஜாப்தா மிக மிக விசித்திரமாக இருக்கிறது; ஒயில்டின் வருணனை, பிரமாதமாக நிகரற்ற முறையிலே அமைந்திருக்கிறது; மன்னன் தன் மகளிடம் சொல்லுகிறான், 'இங்கே பல ஆபரணங்களை ஒளித்து வைத்திருக்கிறேன். உன் அன்னை கூட அதைப் பார்த்ததில்லை. அவை வெகு அபூர்வமானவை, நான்கு வட முத்தாரம் ஒன்று என்னிடம் இருக்கிறது. அவை வெள்ளிக் கதிர்களிலே பதிந்திருக்கும் சந்திரர்களைப் போல இருக்கும். அவை பொன் வலையில் வீழ்ந்த ஐம்பது வெண்மதியங்கள் போன்றவை. அதை ஒரு இராணி அணிந்திருந்தாள்; நீ அதை மார்பிலே அணிந்துகொண்டால், இராணி போல விளங்குவாய். என்னிடம் இரண்டு விதமான சிவந்த நீலக்கற்கள் இருக்கின்றன. ஒன்று ஒயினைப் போல இருண்டிருக்கிறது; நீர் கலந்து நிறப்பொலிவு பெற்ற மதுவைப்போலச் சிவந்திருக்கிறது மற்றொன்று. புலிக் கண்கள்போல் இள மஞ்சள் நிறத்தில் சில கற்களும், காட்டுப் புறாவின் கண்களைப் போன்று வெண் சிவப்பில் சில கற்களும், பூனையின் கண்களைப் போல இளம் பச்சை நிறத்தில் சில கற்களும் இருக்கின்றன. இறந்த பெண்ணின் கண்கள் போன்ற கோமேதகக் கற்களும் என்னிடம்

உண்டு. கலைகள் மாறுந்தோறும் மாறுதலடையும் ஒளிவீசும் சந்திரகாந்தக் கற்களும், முட்டை வடிவில் நீலக் கற்களும், நீலோத்பல மலர்கள் போன்ற சில கற்களும் என்னிடம் உண்டு. கற்களின் நெஞ்சில் கடல் அலையிடுகிறது. உள்ளே உறங்கும் நீல அலைகளைச் சந்திரன் துன்புறுத்துவதில்லை. மஞ்சள் நிறமுள்ள இரத்தினங்கள், கடற் பச்சைக் கற்கள், செந்நிற மாணிக்கங்கள் இன்னும் பல அற்புதமான கற்களும் என்னிடம் உண்டு. நிமூதியா மன்னன் தீக்கோழியின் இறகுகளாலான ஒரு 'கவுனை' அனுப்பி யிருக்கிறான். இந்தத் தீவுகளின் அரசன் மிருதுவான கிளிச் சிறகு களால் பின்னிய நான்கு அழகிய விசிறிகள் அனுப்பியதையும் வைத்திருக்கிறேன். தங்கப் பேழையில் மூன்று வைடூரியக் கற்கள் வைத்திருக்கிறேன். என்னிடம் வேறொரு அபூர்வமான கல் இருக் கிறது. அதனுள் ஒரு பெண் கூர்ந்து பார்ப்பதானது ஆபத்து. அதனை இளைஞர்கள் பார்த்தாலும் துன்பம்தான். இந்தப் பரந்த உலகில் அதனைக் கொண்டு பல அற்புதங்கள் நிகழ்த் தலாம்.........''

இந்த அபூர்வ வருணையிலே ஆஸ்கார் ஒயில்டின் நடை ஒரு தந்தச் சிற்பமாகவே காட்சியளிக்கிறது; கலைஞன், கவிஞன் கண்கொண்டு பார்த்த பண்டகங்கள் எல்லாம், எவ்வளவு அருமை யாக வருணம் போல ஒளி வீசுகின்ற பாஷையிலே தீட்டப்பட்டி ருக்கின்றன.

''தேவ நீதி மன்றம்'' என்ற தலைப்பில் ஆஸ்கார் ஒயில்டின் ஆழ்ந்த கருத்தைப் பாருங்கள்:-

''தேவ நீதி மன்றம், மனிதன் கடவுள் சன்னிதானம் வந்த பொழுது நிசப்தம், கடவுள் மனிதனுடைய ஜீவிய ஏட்டைத் திறந்தார். ''உன் வாழ்வு தீமை நிறைந்ததாகும். உதவி வேண்டிய வர்களுக்குத் துக்கம் தந்தாய். ஏழைகள் இரந்த பொழுது செவி சாய்க்கவில்லை. அனாதைகள் ஐஸ்வரியத்தை அபகரித்தாய். நல்லோர் உணவைப் பறித்து நாய்களுக்கு இட்டாய்'' என்று கடவுள் கூறினார்.

இந்தப் பாபியை நரகத்திற்கோ சுவர்க்கத்திற்கோ அனுப்ப முடியாமல் கடவுளே மதி மயங்கி நிற்கிறார்.''

எப்படி எல்லாம் ஆஸ்கார் ஒயில்ட்டு, நீதியைக் கதையில் வைத்து நுட்பமாகப் பின்னிக் காட்டுகிறார். பாஷை, கவிஞன் கையில், ஒரு மணமுள்ள மலர் நிறைந்த ஜடையாக மின்னலிடுகி றது. ஆம்!

ஆஸ்கார் ஒயில்ட்டுக்கு, வாழ்க்கை அனைத்துமே விடு முறை விழாவாகத் தோன்றியது. இன்பத்தையும், செல்வத்தையும் வெறியோடு நீண்ட நாள் அனுபவித்தப்பின் தான், துன்ப உலகில் புகுந்து திண்டாடித் திண்டாடி, வேதாந்த வலையிலே தன்னு டைய ஆழ்ந்த சிந்தனைகளைப் பின்னிப்பின்னி அலங்கரிக் கிறான். 'உலகமே துன்ப மேடையில்தான் கட்டப்பட்டிருக் கின்றது' என்று அழுதழுது புலம்பித் தீர்க்கிறான்.

பெண்மை எழில் நிறைந்த பார்வையான முகங்களோடு கூடிய சிறு பையன்களை அளவுக்கு மிஞ்சி ஒயில்ட்டு விரும்ப ஆரம்பித்தான். அழகான பையன்களைக் கண்டு காதலிக்கவே ஆரம்பித்து விட்டான். இது ஒரு பெரும்பிழை; ஜனங்கள் ஒயில்ட்டை வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஒயில்டின் புகழ் ஒட்டம் பிடித்தது; எவ்வளவோ செல்வத் தையும், செல்வாக்கையும் ஆரம்பத்தில் பெற்றிருந்த ஒயில்ட்டு இறுதியில் எல்லாம் இழந்து, நோய்வாய்ப்பட்டுத் தனக்கு ஒரு முக்கியமான ஆபரேஷன் செய்து கொள்ளப் பணமின்றி உயிர் நீத்தான். குடித்தே குட்டிச்சுவராய்ப் போனான்.

''வாழ்க்கை எனக்கு ஒரு புதிர். ஆனால், நானும் வாழ்க்கைக்கு ஒரு புதிர்தான்'' என்று ஒயில்ட்டு உறுதியாக அனு பவித்துக் கூறினான்.

இது ஒரு பாரடாக்ஸ் (Paradox) : பார்ப்பதற்கு முரணாகத் தோன்றும் விடுகதை நடையிலே, ஆஸ்கார் ஒயில்டும், பெர்னாட்

ஷாவும் பேருண்மைகளையே பொழிந்து விடுகிறார்கள்; நடையின் விசித்திரக் கூர்மையிலே, உண்மையே ஒட்டகம் போலக் காட்சியளிக்கிறது!

ஆஸ்கார் ஒயில்ட்டு, மும்மொழிப் புலவர்: லத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம் மூன்று பாஷைகளையும் அனுபவித்து மிக நுட்பமாக இலக்கிய மணத்துடன் எழுதும் அபூர்வ ஆற்றல் பெற்றவர்;

'டிஸ்ராலி'யைப் போல மிக ஆடம்பரமான ஆடையை அணிந்து கொள்ள ஆசைப்பட்டார்;

ஷெரிடனைப்போல, 'விட்டி'யாக வேடிக்கையாகப் பேசவும் எழுதவும் முடியும்; ஆனால் ஷெரிடனைப் போல, அவ்வளவு ஆழமாகப் பிறரைத் தாக்கக்கூடிய 'SATIRE' வசைப் பாட்டில் இறங்க மாட்டார்.

வருணங்களிலே வெறிக்கொண்ட மனம், அவருடைய இலக்கியப் பேனாவை சித்திரக் கோலாகவே மாற்றிவிட்டது என்று சொல்லலாம். 'ஷா'வின் நடையிலே, இவ்வளவு வருண சித்தரம் இல்லை. ஒயில்ட்டு நேரே எழுதுகிறார்; (SHAW) ஷா சுற்றிச்சுற்றி எழுதுகிறார். ஆங்கில பாஷையே, ஆஸ்கார் ஒயில்டின் பேனா முனையிலே டான்ஸ் ஆடுகிறது.

ஒயில்டின் கடித இலக்கியம், தனி இன்பம் கொண்டது.

**வீ.ஆர்.எம். செட்டியார்**



# சலோம்

## ஓரங்க நாடகம்

## நாடக மாந்தர்கள்

| | | |
|---|---|---|
| எரோத்து | - | சூதியா நாட்டு மன்னன் |
| சோகனான் | - | முற்றுணர்ந்தோன் |
| சிரியா | - | காவலர் தலைவன் |
| திசெல்லீனசு | - | உரோமானிய வாலிபன் |
| முதல் வீரன் | | |
| இரண்டாவது வீரன் | | |
| யூதர்கள் | | |
| நாசுரேனியர்கள் | | |
| ஓர் அடிமை | | |
| நாமன் | - | கொலைஞன் |
| எரோதியாசு | - | மன்னி |
| சலோம் | - | எரோதியாசின் மகள் |
| மன்னியின் பணியாள் | | |
| சலோமின் பணியாள்கள் | | |

# சலோம்

*(அரண்மனை விருந்து மண்டபத்தின் மேல்மாடி பலகணி யின்மேல் சில போர்வீரர்கள் சாய்ந்து கொண்டிருக்கின்றனர். இப்புறத்திலே மாபெரும் படிக்கட்டுகள் செல்லுகின்றன)*

## வானில் நிலவு

***சிரியா இளைஞன் :***

மன்னர் மகள் சலோம் இன்றிரவு எவ்வளவு அழகாக இருக்கிறாள்!

***மன்னியின் பணியாள் :***

நிலவினைப்பார், புதுமையாக இருக்கிறது! கல்லறை யிலிருந்து பெற்று எழும் மங்கையைப் போலத் தோன்றுகிறது. அது இறந்துபோன பெண்ணைப்போல் இருக்கிறது. மாண்டு மடிந்த பொருள்களைத் தேடிக்கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது அல்லவா?

***சிரியா இளைஞன் :***

ஆம், பார்ப்பதற்கு அது வியப்பார்வமாகத் தோன்றுகிறது. மஞ்சள் மெல்லாடையை அணிந்திருக்கும் சின்னஞ்சிறிய இளவர சியைப் போன்று இருக்கிறது. வெண் புறாக்களையே காலடிக ளாகக் கொண்ட இளவரசியைப்போல இருக்கிறது அது, அது கூத்து ஆடுவதுபோலத் தோன்றுகிறது.

***மன்னியின் பணியாள் :***

வெண்ணிலவு செத்துப்போன பெண் போல இருக்கிறது. அது மிகவும் மெல்லெனச் செல்லுகிறது.

*(விருந்து மண்டபத்தில் பேரொலி)*

**முதல் வீரன் :**

என்ன ஆரவாரம்! காட்டு விலங்குகளைப் போல ஊளையிடும் அவர்கள் யார்?

**இரண்டாவது வீரன் :**

யூதர்கள், அவர்கள் எப்போதுமே இதுபோலத்தான். மதத்தைப் பற்றிப் பிணக்கிடுகிறார்கள்.

**முதல் வீரன் :**

மதத்தைப்பற்றி ஏன் பிணக்கிடுகிறார்கள்?

**இரண்டாவது வீரன் :**

நான் சொல்லேன். அவர்கள் எப்போதும் பிணக்கிடு கிறார்கள். எடுத்துக்காட்டாக பாரிசீயர்கள் தேவதைகள் இருப் பதாகச் சொல்லுகிறார்கள். சடுசியர்கள் கிடையாதென்று சொல்லுகிறார்கள்.

**முதல் வீரன் :**

இதைப்பற்றி எல்லாம் பிணக்கிடுவது எள்ளலாகும்.

**சிரியா இளைஞன் :**

மன்னன் மகள் சலோம் இன்றிரவு எவ்வளவு அழகாக இருக்கிறாள்!

**மன்னியின் பணியாள் :**

நீ எப்போதும் .அவளையே பார்த்துக்கொண்டு இருக் கிறாய். நீ அளவுக்கு மிஞ்சி அவளை நோக்குகிறாய். அந்த நிலை மையில் இருப்பவர்களைப் பார்ப்பது தொல்லை. ஏதாவது அஞ்சத்தக்கது நிகழலாம்.

**சிரியா இளைஞன் :**

இன்றிரவு அவள் அரும்பேரழகியாய் இருக்கிறாள்.

**முதல் வீரன் :**

மன்னரைப் பார்த்தால் கவலையாக இருப்பவர் போலத் தெரிகிறது.

**இரண்டாவது வீரன் :**

ஆம், கவலையாகத்தான் தோன்றுகிறார்.

**முதல் வீரன் :**

அவர் எதையோ பார்த்துக்கொண்டிருக்கிறார்.

**இரண்டாவது வீரன் :**

அவர் யாரையோ பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**முதல் வீரன் :**

யாரைப் பர்ர்க்கிறார்?

**இரண்டாவது வீரன் :**

நான் சொல்லமாட்டேன்.

**சிரியா இளைஞன் :**

அரசிளர் செல்வி எவ்வளவு மெலிந்து போய் விட்டாள்! இதுபோல ஒரு முறைகூட நான் அவளைப் பார்த்தது இல்லை. வெள்ளிக் கண்ணாடியிலே தோன்றும் வெள்ளைத் தாமரை மலரின் நிழலைப்போல இருக்கிறாள் அவள்.

**மன்னியின் பணியாள் :**

நீ அவளைப் பார்க்கலாகாது. நீ அளவுக்கு மீறி அவளைப் பார்க்கிறாய்.

**முதல் வீரன் :**

மன்னனுடைய கிண்ணத்திலே மதுவை நிரப்பி இருக்கிறாள் மன்னி.

**காப்படோசியன் :**

முத்துக்கள் பதித்த கருங்கவிப்பு அணிந்திருக்கிறாளே அவள் தான் மன்னியா? நீலத் துளிகள் படிந்த அந்தக் கூந்தலழகி தான் மன்னியா?

**முதல் வீரன் :**

ஆம், அவள் தான் மன்னி எரோதியா.

**இரண்டாவது வீரன் :**

மன்னனுக்கு மதுவின்மேல் மிக்க ஆவல், மூன்று வகை யான மது அவனிடம் இருக்கிறது. சாமத்ராசிலிருந்து வரும் மது, சீசரின் மேலங்கியைப் போல செந்நீல நிறமாக இருக்கிறது.

**காப்படோசியன் :**

நான் சீசரைப் பார்த்ததே இல்லை.

**இரண்டாவது வீரன் :**

சைப்ரசு நகரிலிருந்து வரும் மது தங்கத்தைப்போல மஞ்சளாக இருக்கிறது.

**காப்படோசியன் :**

தங்கம் என்றால் எனக்கு வெகு ஆசை.

**இரண்டாவது வீரன் :**

மற்றொரு மது சிசிலியிலிருந்து வருகிறது. அது குருதியைப் போலச் சிவப்பாக இருக்கிறது.

**நூபியன் :**

எங்கள் நாட்டுத் தெய்வங்களுக்கு அரத்தத்தின் மேல் மிக்க ஆவல். ஆண்டிற்கு இருமுறை இளைஞர்களையும் இளஞ்சி களையும் அவைகளுக்காகப் பலியிடுகிறோம். ஐம்பது இளைஞர் கள், நூறு இளஞ்சிகள். ஆனால், அவற்றுக்கு வேண்டிய அளவு

நாங்கள் பலி கொடுக்கவில்லை என்றே தோன்றுகிறது. காரணம், அவை எங்களிடம் கடுமையாகவே இருக்கின்றன.

**காப்படோசியன் :**

என் நாட்டிலே தெய்வங்கள் இல்லை. அவற்றை உரோமானியர் விரட்டியடித்து விட்டனர். அவை மலைகளுக் குள்ளே ஒளிந்து கொண்டிருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால், அதை நான் நம்பவில்லை. மும்முறை இராப்போதில் மலைக்குப் போய் பல இடங்களிலும் தேடினேன். அவற்றைக் காணோம். கடைசியில், பெயர் சொல்லியும் அழைத்துப் பார்த்தேன். அவை வரவில்லை. அவை எல்லாமே இறந்து போய்விட்டதென்று நினைக்கிறேன்.

**முதல் வீரன் :**

கண்ணால் காணமுடியாத தெய்வத்தையே யூதர்கள் வணங்குகிறார்கள்.

**காப்படோசியன் :**

அதென்ன, எனக்கு விளங்கவில்லையே!

**முதல் வீரன் :**

அதாவது, நாம் பார்க்க முடியாத பொருள்களைத்தான் அவர்கள் நம்புகிறார்கள்.

**காப்படோசியன் :**

இது முற்றிலும் எள்ளலாகவே இருக்கிறது.

**சோகனானுடைய குரல் :**

எனக்குப் பின்னால், என்னைக்காட்டிலும் சிறந்த வலு வுள்ளவன் ஒருவன் தோன்றுவான். அவனுடைய செருப்பு முடி களை அவிழ்ப்பதற்குக் கூட தகுதியானவன் அல்லேன் நான். அவன் நிலவுலகிலே தோன்றியதும், தனியான இடங்கள் களிப் புறும் அல்லியைப்போல அவை மலர்பூக்கும். கண்ணிழந்த குரு

டர்கள் விழிபெறுவர்; செவிடர்களுக்குக் காது கேட்கும்; குழந்தைகள் வனவிலங்குகளின் குகையிலே புகுந்து அரிமாவின் பிடரி மயிர் பிடித்து இழுத்துக் கொண்டு வருவார்கள்.

**இரண்டாவது வீரன் :**

பேசாமல் இருக்கச் சொல், அவன் எப்போதும் கிண்டலாக எதையாவது சொல்லிக்கொண்டிருக்கிறான்.

**முதல் வீரன் :**

முடியாது, அவன் வாலறிவன். வெகு நல்லவன். நாள்தோறும் நான் உணவு அளிக்கும்போது, அவன் என்னை, வாழ்த்துகிறான்.

**காப்படோசியன் :**

அவன் யார்?

**முதல் வீரன் :**

ஒரு முற்றுணர்ந்தோன்.

**காப்படோசியன் :**

பெயர் என்ன?

**முதல் வீரன் :**

சோகனான்.

**காப்படோசியன் :**

எங்கிருந்து வந்திருக்கிறான் ?

**முதல் வீரன் :**

பாலைவனத்திலிருந்து. அங்கு வெட்டுக்கிளிகளையும் காட்டுத்தேனையுமே உண்டு வந்தான். ஒட்டக மயிரையே உடையாக அணிந்திருந்தான். இடுப்பிலே தோல் அணி அணிந்திருந்தான். பார்ப்பதற்கு வெகு அஞ்சத்தக்கவாக இருந்தான்.

பெருந்திரளான கூட்டம் அவனைப் பின் தொடர்வது வழக்கம். அவனுக்குத் தொண்டர்களும் இருந்தார்கள்.

***காப்படோசியன் :***

*என்ன சொல்லுகிறான் ?*

***முதல் வீரன் :***

*நமக்குத் தெரியாது. சிற்சில சமயத்திலே அஞ்சத்தக்க சொற்களைச் சொல்லுகிறான். ஆனால், அவன் சொல்லுவதைப் புரிந்து கொள்வது கடினம்.*

***காப்படேசியன் :***

*அவனைப் பார்க்கலாமா?*

***முதல் வீரன் :***

*கூடாது என்பது மன்னன் ஆணை.*

***சிரியா வாலிபன் :***

*இளவரசி விசிறியால் முகத்தை மறைத்துக் கொண்டு இருக்கிறாள். அவளுடைய வெண்மையான சிறிய கைகள், கூடுகளுக்குப் பறந்து செல்லும் புறாக்களைப்போல, சிலிர்த்து ஆடிக் கொண்டு இருக்கின்றன.*

***மன்னியின் பணியாள் :***

*என்ன செயல் செய்கிறாய் ? ஏன் அவளைப் பார்க்கிறாய்? நீ அவளைப் பார்க்கக் கூடாது..... அஞ்சத்தக்க நிகழ்வு ஏதாவது நிகழலாம்.*

***காப்படோசியன் :***

*(சிறையைச் சுட்டிக்காட்டி) என்ன வியத்தகு சிறை!*

***முதலாவது வீரன் :***

*உடல் நலத்துக்கு மிக்க கேடாய் இருக்கும்.*

**இரண்டாவது காவலாள் :**

மன்னி எரோதியாவின் முதல் கணவனும், இப்போதைய மன்னனின் அண்ணனுமாகிய முன்னாள் அரசர், அதில் பனிரெண்டு ஆண்டு சிறையுண்டிருந்தார். அப்படி இருந்தும் சிறை அவரைக் கொல்லவில்லை. தம்பி அவருடைய கழுத்தை முறித்துக் கொல்லச் சொன்னார்.

**காப்படோசியன் :**

*கழுத்தை முறித்துக் கொல்லும்படியாகவா? யார் செய்தது அதை?*

**இரண்டாவது வீரன் :**

*(கொலைஞனைச் சுட்டிக் காட்டியவாறு) அதோ நிற்கிறானே அவன். அவன் பெயர் நாமன்.*

**காப்படோசியன் :**

*அவன் அஞ்சவில்லையா ?*

**இரண்டாவது வீரன் :**

இல்லை, இல்லை. அரசன் தன் கணையாழியை அவனுக்கு அனுபினான்.

**காப்படோசியன் :**

*என்ன கணையாழி?*

**இரண்டாவது வீரன் :**

கொலைத்தண்டனைக் கணையாழி. அதனாலே, அவன் அஞ்சவில்லை.

**காப்படோசியன் :**

என்ன இருந்தாலும், கழுத்தை முறித்து ஓர் அரசனைக் கொல்லுவது அஞ்சத்தக்கது.

***முதல் வீரன் :***

*ஏன்? மற்றவர்களைப்போல அரசர்களுக்கும் ஒரு கழுத்துத் தானே!*

***காப்படோசியன் :***

*அது அஞ்சத்தக்கதன்றோ?*

***சிரியா இளைஞன் :***

*இளவரசி எழுந்திருக்கிறாள். அவள் மேசையை விட்டு நகருகிறாள். மிகவும் தொல்லை அடைந்தவள் போலத் தோன்று கிறாளே! - ஆ இந்த வழியாகத்தான் வருகிறாள், நமது பக்கமாகத் தான் வருகிறாள். எவ்வளவு மெலிந்து இருக்கிறாள்!*

***மன்னியின் பணியாள் :***

*அவளைப் பார்க்காதே. உன்னை வேண்டுகிறேன், அவளைப் பார்க்காதே.*

***சிரியா இளைஞன் :***

*வழி தவறிப்போன புறாவைப் போலிருக்கிறாள் அவள்...*
*காற்றிலே நடுங்கும் அல்லி மலரைப் போலிருக்கிறாள்*
*அவள்..... வெள்ளிமலரைப் போலிருக்கிறாள் அவள்.*

*(சலோம் நுழைகிறாள்)*

***சலோம் :***

*நான் இங்கிருக்க மாட்டேன், இருக்கவும் முடியாது. அரசன் பொழுதெல்லாம் என்னையே ஏன் பார்க்கிறான்? என் அன்னையின் கணவனே என்னை இப்படிப் பார்ப்பது வியப் புதான். இதற்கு என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை.*

***சிரியா வாலிபன் :***

*இளவரசி, விருந்திலிருந்து இப்பொழுதுதான் வந்தீர்களா?*

**சலோம் :**

ஆ, ஆ. இங்கே எவ்வளவு இன்பமாக இருக்கிறது! அங்கே, விருந்து மண்டபத்திலே, எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூடத்தனமான நடத்தைகளிலே ஒருவரை ஒருவர் அடித்துக் கொல்லுகிறார்கள். ஓயாமல் குடித்துக் குடித்து, மதுவைக் கீழேயும் கொட்டிவைக்கும் அநாகரிகர்களும் அந்த விருந்து மண்டபத்திலே குழுமி இருக்கின்றனர். நுண்ணிய மதியுடைய எகிப்தியர்களும், அழகிய விழிகளையும் கன்னங்களையும் உடைய கிரேக்கர்களும், விலங்காண்டித் தன்மை நிறைந்த உரோமானியர்களும் அங்கே கூடியிருக்கிறார்கள். ஆ! உரோமானியர்கள் என்றால் எனக்கு எவ்வளவு வெறுப்பு உண்டாகிறது! அவர்கள் முரடர்களாயிருந்தபோதிலும் உயர் குலத்துச் செல்வர்களைப்போல் நடிக்கிறார்கள்.

**சிரியா இளைஞன் :**

சற்று உட்காருகிறீர்களா?

**மன்னியன் பணியாள் :**

அவளோடு ஏன் பேசுகிறாய்? அவளை ஏன் பார்க்கிறாய்? ஐயோ, அஞ்சத்தக்க நிகழ்வு ஏதாவது நிகழும்.

**சலோம் :**

நிலவு பார்ப்பதற்கு எவ்வளவு இன்பமாக இருக்கிறது. அது ஒரு சிறிய நாணயம் போல இருக்கிறது. அது குளிர்ச்சியாகவும் அடக்கமாகவும் இருக்கிறது. அது ஒரு கன்னிப்பெண் என்று நான் உறுதியாக நினைக்கிறேன். கன்னிப்பெண்ணிற்கு உரிய அழகு அதனிடம் இருக்கிறது. ஆம், அது ஒரு கன்னிப்பெண், அது ஒருபோதும் தனக்குக் களங்கம் உண்டாக்கிக் கொண்டதில்லை. அது மற்ற தேவதைகளைப் போல மனிதர்கள் கையில் அகப்பட்டுக் கொள்ளவில்லை.

**சோகனான் :**

தேவன் வந்துவிட்டான். மனித குமாரன் வந்துவிட்டான். ஆட்பரிகள் ஆறுகளிலே ஒளிந்துகொண்டன. நீரணங்குகள் ஆறு

களிலிருந்து ஓடி காடுகளிலே மரங்களுக்கிடையில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

**சலோம் :**

கத்தியது யார் ?

**இரண்டாவது வீரன் :**

முற்றுணர்ந்தோன் அரசி.

**சலோம் :**

முற்றுணர்ந்தோனா? மன்னன் அஞ்சும் அந்த அறிவனா?

**இரண்டாவது வீரன் :**

அது எங்களுக்குத் தெரியாது. ஆனால், இப்போது பேசியவன் முற்றுணர்ந்தோன்தான்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, பல்லக்கைக் கொண்டுவரச் சொல்லட்டுமா! இன்றிரவு பூங்கா இன்பமயமாக இருக்கிறது.

**சலோம் :**

அவன் எனது அன்னையைப்பற்றி அஞ்சத்தக்க செய்திகளைச் செல்லுகிறான், அல்லவா?

**இரண்டாவது வீரன் :**

அவன் சொல்லுவது எங்களுக்கு விளங்குவதே இல்லை.

**சலோம் :**

ஆம், அவன் என் அம்மாவைப் பற்றி அஞ்சத்தக்க ஏதேதோ சொல்லுகிறான்.

*(ஓர் அடிமை வருகிறான்)*

**அடிமை :**

இளவரசி, விருந்திற்கு வருமாறு மன்னர் உங்களை வேண்டுகிறார்.

**சலோம் :**

நான் வரமாட்டேன்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, என்னை மன்னியுங்கள் தாங்கள் விருந்திற்குப் போகாவிடில் ஏதாவது கேடு நிகழலாம்.

**சலோம் :**

இந்த முற்றுணர்ந்தோன் முதியவனா ?

**சிரியா இளைஞன் :**

இளவரசி விருந்திற்குப் போவதுதான் நல்லது. தங்களை அழைத்துக் செல்லட்டுமா?

**சலோம் :**

இந்த அறிவன் ....இவன் என்ன, முதியவனா?

**முதல் வீரன் :**

இல்லை, இளவரசி, அவன் மிக்க இளைஞன்.

**இரண்டாவது வீரன் :**

உறுதியாகச் சொல்ல முடியாது. இவனே இலியாசு என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

**சலோம் :**

இலியாசு என்பவன் யார்?

**இரண்டாவது வீரன் :**

வெகு காலத்திற்கு முன்னால் இந்த தேசத்திலே தோன்றிய முற்றுணர்ந்தோன் இளவரசி.

**அடிமை :**

மன்னருக்கு. என்ன விடை சொல்லுவது, இளவரசி ?

**சோகனான் :**

ஓ, பாலத்தீனமே! உன்னை அடித்தவனுடைய தடி ஒடிந்த தற்காகக் களி கொள்ள வேண்டாம். பாம்பின் வயிற்றிலிருந்து கரு நாகம் பிறக்கும். அது பறவைகளை எல்லாம் விழுங்கிவிடும்.

**சலோம் :**

என்ன வியத்தகு குரல்! அவனுடன் பேசுகிறேன்.

**முதல் காவலன் :**

இளவரசி, அது நடக்கிற காரியம் அன்று. அவனுடன் யாரும் பேசுவதை மன்னர் விரும்பவில்லை. முதன்மைக் குருகூட அவனோடு பேசக்கூடாதென்று மன்னர் ஆணையிட்டிருக்கிறார்.

**சலோம் :**

நான் அவனுடன் பேச விரும்புகிறேன்.

**முதல் வீரன் :**

அது இயலாத செயல், இளவரசி.

**சலோம் :**

அவனுடன் பேசுவேன்.

**சிரியா இளைஞன் :**

விருந்திற்குப் போவது நல்லது அன்றோ?

**சலோம் :**

இந்த முற்றுணர்ந்தோனை அழைத்து வாருங்கள். (அடிமை போகிறான்)

**முதல் வீரன் :**

எங்களுக்குத் துணிவு இல்லை, இளவரசி.

**சலோம் (வீரர்களை நோக்கி) :**

நான் சொல்லுவது கேட்கவில்லையா? முற்றுணர்ந்தோனை அழைத்துக்கொண்டு வாருங்கள். நான் அவனைப் பார்க்க விரும்புகிறேன்.

**இரண்டாவது வீரன் :**

இளவரசி, இந்த வேலையைச் செய்யும்படி எங்களைச் சொல்லாதீர்கள்.

**சலோம் :**

என்னைக் காத்துக்கொண்டிருக்க வைக்கிறீர்களே!

**முதல் வீரன் :**

இளவரசி எங்கள் உயிர் எல்லாம் உங்களுடையதே. ஆனால், இப்போது நீங்கள் சொன்னதை மட்டும் நாங்கள் செய்ய மாட்டோம்.

**சலோம் :**

(சிரியா இளைஞனை நோக்கியவாறு) ஆ!

**மன்னியின் பணியாள் :**

என்ன நடக்கப் போகிறதோ? ஏதாவது தீங்கு நேரும் என்பது உறுதி.

**சலோம் :**

(சிரியா இளைஞனிடம் சென்று) எனக்காக, இது செய்யேன், நாராபாத்து! செய்யமாட்டாயா? உன்னிடம் நான் எப்போதும் அன்பாகவே இருந்திருக்கிறேன். எனக்காக இது செய். இந்த வியப்புமிகு அறிவனை நான் பார்க்கிறேன். அவனைப்பற்றி மக்கள் எவ்வளவோ சொல்லுகிறார்கள். மன்னரும் அவனைப்பற்றிப் பலமுறை சொல்லி இருக்கிறார். மன்னர் அவனைக் கண்டு அஞ்சுகிறார் என்று நினைக்கிறேன். நீ, நீயுங்கூட அவனைக்கண்டு அஞ்சுகிறாயா, நாராபாத்து?

**சிரியா இளைஞன் :**

அஞ்சவில்லை, இளவரசி. உலகத்திலே யாரிடமும் எனக்கு அச்சம் இல்லை. ஆனால், இந்தக் கிணற்றின் வாயைத் திறக்கக் கூடாதென்று மன்னர் ஆணையிட்டிருக்கிறாரே!

**சலோம் :**

எனக்காக இதைச் செய்யேன், நாராபாத்து! நாளை பல்லக்கில் போகும்போது, உனக்காக ஒரு ப்சிய மெல்லிய மலரை எறிவேன்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, முடியாது, முடியாது.

**சலோம் :**

*(சிரித்துக் கொண்டு)* எனக்காக இதைச் செய்யேன், நாரா பாத்து. நாளை பல்லக்கிலே போகும்போது, நுண்துகில் திரை வழியே உன்னைப் பார்ப்பேன். ஒருவேளை, உன்னை நோக்கிப் புன்முறுவல் செய்தாலும் செய்வேன். நாராபாத்து என்னைப்பார் - என்னைப் பாரேன். எனக்காக இதைச் செய்வாயாக!

**சிரியா இளைஞன் :**

*(மூன்றாவது வீரனுக்குச் குறிப்புகாட்டி)* முற்றுணர்ந்தோன் வெளியே வரட்டும்..... இளவரசி அவனைப் பார்க்க விரும்புகிறாள்.

**சலோம் :**

*ஆ!*

**மன்னியின் பணியாள் :**

ஆ, வெண்ணிலா வியப்புடன் தோன்றுகிறது. ஒர் இறந்த உடம்பை மூடிக் கொள்ளுவதற்காகக் கையை நீட்டி ஒரு போர்வைத் தேடிக்கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

**சிரியா இளைஞன் :**

ஆம். வெண்ணிலா வனப்போடு தோன்றுகிறது. முகில் திரை வழியே சின்னஞ்சிறிய இளவரசியைப் போலப் புன் முறுவல் பூத்துக்கொண்டிருக்கிறது.

(முற்றுணர்ந்தோன் வருகிறான். சலோம் அவனைப் பார்த்துவிட்டு மெல்லெனப் பின் வாங்குகிறாள்,)

**சோகனான் :**

பழியும் அருவருப்பும் நிறைந்த அவன் எங்கே இருக் கிறான்? வெள்ளி உடை அணிந்தவாறு எல்லோர் முன்பாக ஒரு நாள் இறந்து போகப்போகும் அந்த மனிதன் எங்கே? அவனை வெளியே வரச்சொல்லுங்கள், பாழடைந்த இடங்களிலும் மன்னவர்களின் மாளிகைகளிலும் இரைந்து கதறியவன் குரலைக் கேட்கட்டும்.

**சலோம் :**

யாரைப்பற்றிப் பேசுகிறான்?

**சிரியா இளைஞன் :**

உங்களால் கண்டுபிடிக்க முடியாது. இளவரசி.

**சோகனான் :**

சுவர்களிலேயிருந்த ஓவியங்களைப் பார்த்துவிட்டு சால்டியாவிற்குத் தூதுவர்களை அனுப்பியவள் எங்கே?

**சலோம் :**

அம்மாவைப் பற்றி அல்லவா சொல்லுகிறான்?

**சிரியா இளைஞன் :**

இல்லை, இல்லை. இளவரசி.

**சலோம் :**

ஆம், என் அன்னையைப் பற்றித்தான்................ என் அன்னையைப் பற்றித்தான்.

**சோகனான் :**

அச்சீரியா படைத்தலைவர்களைச் சேர்ந்த அந்த மாது எங்கே? அழகிய உடைகளை அணிந்து, பொற்கேடயங்களைத் தாங்கி, வெள்ளிக் கவிப்புகளை அணிந்திருக்கும் வீரர்களான எகிப்திய இளைஞர்களைச் சேர்ந்த அந்தப் பெண் எங்கே? பழிப் பாகிய மஞ்சத்திலே கண்ணுறங்கும் அவளை எழுப்புங்கள். பொன்னுலகத்துக்கு வழிகாட்டுபவன் சொல்லும், சொற்களைக் கேட்டுத் தான் செய்த பாவத்தை நினைத்து, நினைத்து கண்ணீர் விடட்டும், வரச்சொல்லுங்கள்.

**சலோம் :**

அஞ்சத்தக்கவனாக இருக்கிறான், பார்ப்பதற்கு மிக்க அச்ச மூட்டுபவனாய் இருக்கிறான்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி அருட்கூர்ந்து இங்கே இருக்காதீர்கள், உங்களை வேண்டுகிறேன்.

**சலோம் :**

எல்லாவற்றைக் காட்டிலும் அவனுடைய கண்கள்தாம் அஞ்சத்தக்கவையாக இருக்கின்றன. அவை வனவிலங்குகள் வாழும் இருண்ட குகைகள்போலத் தோன்றுகின்றன,....அவன் மீண்டும் பேசுவானா?

**சிரியா இளைஞன் :**

இளவரசி, இங்கே இருக்காதீர்கள், உங்களைக் கெஞ்சு கிறேன்.

**சலோம் :**

ஆ, அவன் எவ்வளவு மெலிந்திருக்கிறான்! மெல்லிய தந்தப்பதுமைப்போல இருக்கிறான், வெள்ளிச் சிற்பம் போல் நிற்கிறான். நிலவைப்போல வனப்பு மிகுந்திருக்கிறான். நிலாக்

கதிர்போல ஒளி வீசுகிறான். இன்னுங்கொஞ்சம் அருகேபோய் அவனைப்பார்ப்பேன்.

**சிரியா வாலிபன் :**

வேண்டாம், இளவரசி வேண்டாம்.

**சலோம் :**

அருகில் சென்று பார்ப்பேன்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, இளவரசி!

**சோகனான் :**

என்னை உற்று நோக்கும் இந்த மங்கை யார்? அவள் என்னைப் பார்க்கலாகாது. சுடர் வீசும் இமைகளுக்கிடையிலிருக்கும் பொன்னிறக் கண்களால் அவள் என்னை ஏன் பார்க்கிறாள்? அவள் யார் என்று எனக்குத் தெரியவில்லை. தெரிந்துகொள்ளவும் விருப்பமில்லை. போகச் சொல்லுங்கள். நான் பேச விரும்பும் பெண் அவளல்லள்.

**சலோம் :**

நான் மன்னி எரோதியாவின் மகள். சூதியா நாட்டு இளவரசி, என் பெயர் சலோம்.

**சோகானன் :**

தொலைவில்போ. பாபிலோன் குமாரியே, ஆண்டவன் தேர்ந்தெடுத்த தேவதூதன் அருகே வராதே, உன்னுடைய அன்னை, பாவங்களாகிய மதுவைப் நாநிலம் எங்கும் கொட்டி வைத்திருக்கிறாள். அந்தப் பாவங்கள் அழும் குரல், பெருந்திரு மகன் காதிற்கு எட்டிவிட்டது.

**சலோம் :**

சோகனான், பேசு மீண்டும் வாய் திறந்து பேசு உன்னுடைய குரல் மதுவைப்போல சுவையாயிருக்கிறது எனக்கு.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, இளவரசி ஐயோ!

**சலோம் :**

சோகனான், நான் என்ன செய்ய வேண்டும் சொல்லு! வாய்திறந்து மீண்டும் பேசு.

**சோகனான் :**

சோடாம் புதல்வியே, என் அருகில் வராதே! முகத்தைத் திரையால் மூடிக்கொள். தலையிலே சாம்பலைத் தூவிக்கொள். பாலைவனத்திற்குப் போ. அங்கே, மனித குமாரனைத் தேடு.

**சலோம் :**

அவன் யார்? மனித குமாரன் யார்? உன்னைப்போல இவ்வளவு அழகாக இருப்பானா, சோகனான்?

**சோகனான் :**

அப்பால் போ! அரண்மனையிலே காலதேவனுடைய சிறகு ஒலி கேட்கிறது.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, உங்களைக் கெஞ்சுகிறேன், உள்ளே போங்கள்.

**சோகனான் :**

தேவதூதர் வாளை வைத்துக்கொண்டு இங்கே என்ன செய்கிறாய்? மாசு நிறைந்த இந்த அரண்மனையிலே யாரைத் தேடுகிறாய்? வெள்ளி உடை அணிந்தவன் மாளப்போகும் நாள் இன்னும் வரவில்லை.

**சலோம் :**

சோகனான்!

**சோகனான் :**

*யார் பேசுகிறது?*

**சலோம் :**

சோகனான், வனப்பு மிகுந்த உன் உடலின் மேல் எனக்குக் காதல் உண்டாகிறது. களை வெட்டாத நிலத்திலே வளர்ந்திருக்கும் அல்லி மலர்களைப்போல வெண்மையாய் இருக்கிறது உனது உடல், குன்றங்களிலே படிந்து பள்ளத்தாக்குகள் வழியாக ஓடி விழும் பனிக்கட்டியைப்போல வெண்மையாக இருக்கிறது. உனது உடம்பு. அராபிய அரசியின் பூங்காவிலே மலரும் வெண் மலர்கள் கூட உன்னைப்போல இவ்வளவு வெண்மையாய் இல்லை. அராபிய அரசியின் தோட்டத்திலே மலரும் செம் மலர்களோ, மணக்கும் இலைகளின் மேல் ஒளி வீசும் வைகறையின் பொற்பாதங்களோ; கடலை மார்போடு மார்பு தழுவிக்கொள்ளும் நிலவின் வெண் மார்போ.............. உனது உடலைப்போல் வெண்மையான பொருள் உலகில் எங்குமே இல்லை. உனது திருமுகத்தைத் தொடவே பார்க்கிறேன்.

**சோகனான் :**

தள்ளிபோ! பாபிலோன் மகளே, பெண்களாலேயே உலகத்தில் தீமைகள் பெருகுகின்றன. என்னோடு பேசாதே. நீ பேசுவதைக் கேட்கமாட்டேன். விண்ணகத்திலே உள்ள தேவனின் குரலை மட்டுமே கேட்பேன்.

**சலோம் :**

உனது உடல் அழகற்றதாய் இருக்கிறது. அது தொழுநோயாளியினுடைய உடம்பைப் போலிருக்கிறது. அது விரியன் பாம்புகள் ஊர்ந்து சென்ற காரைச் சுவர்கள்போல இருக்கிறது. அது தேள்கள் வாழும் பொந்துகள் நிறைந்த சுவரைப்போலிருக்கிறது. அது அருவருக்கத்தக்க பொருள்கள் நிறைந்த கல்லறையைப் போலிருக்கிறது. உனது உடம்பு அச்சமானதாக, பெரும் அஞ்சத்தக்கதாக இருக்கிறது. சோகனான், உன்னுடைய கூந்தல்

மேலேயே எனக்குக் காதல். அது, ஈதாம் நாட்டு கொடிமுந்திரிக் கொடிகளில் இருந்து கொத்துக் கொத்தாகத் தொங்கும் கருந்தி ராட்சைப் பழங்களைப்போல இருக்கிறது. இலெபனான் நாட்டு செடார் மரங்களைப்போல, பகலிலே கொள்ளைக்காரர்களும் அரிமாக்களும் ஒளிந்துகொள்ளுவதற்குப் புகலிடம் அளிக்கும் படர்ந்தடர்ந்த செடார் மரங்களைப்போல, இருக்கிறது. உனது குழல்முடி, காரிருள் நிறைந்த நீண்ட இராப்போதிலே நிலவுப் பெண் முகத்தை மறைத்துக்கொள்ளுகிறாள், விண்மீன் அஞ்சித் திகிலுறுகின்றன. அந்த இராப்போதைக் காட்டிலும்; கருமை மிகுந்து விளங்குகிறது உனது தலைமயிர். காடுகளிலே நிலவும் அமைதிகூட உனது தலைமுடிபோல இவ்வளவு இருள் மிகுந்த தில்லை, அதற்கு ஈடாக உலகில் எதுவுமே இல்லை....... அதைத் தொட்டுப் பார்க்கிறேன்.

**சோகனான் :**

தள்ளிப்போ, சோடாம் குமாரியே, என்னைத் தொடாதே தேவன் வாழும் இந்த கோயிற்கு மாசு விளைவிக்காதே.

**சலோம் :**

உன்னுடைய தலைமுடி அஞ்சத்தக்கதாக இருக்கிறது, அதிலே சேறும் தும்பும் படிந்திருக்கிறது. முள்ளால் ஒரு முடி செய்து, அதை உன்னுடைய தலையிலே கவிழ்த்தலைப் போல் இருக்கிறது. கரும் பாம்புகள் உன்னுடைய கழுத்தைச் சுற்றிச் சுற்றி நெளிவதுபோல இருக்கின்றன, இந்த மயிர்க் கற்றைகள். உன் தலைமுடியில் எனக்கு காதல் இல்லை........ சோகனான், உனது இதழ்களின் மீதே எனக்கு காதல். தந்த துணியின்மேல் இருக்கும் சிவப்பு மலரைப்போல இருக்கிறது, அது. கொல்லிப் பூங்கா விலே மலரும் மாதுளை மலர்கள், செம்மலர்களைக் காட்டிலும் சிவப்பாக இருக்கின்றன. ஆனால் அவைகூட உனது இதழ்களுக்கு முன் நிற்கா. திருக்கோயில்களிலே சுற்றி அலைந்து, குருக்கள் அளிக்கும் உணவை உண்டு நாள்களைக் கழிக்கும் புறாக்களின்

மெல்லிய சீரடிகளைக் காட்டிலும் சிவந்தன உனது இதழ்கள். கானகத்திலே அரிமாவைக் கொன்றுவிட்டு வந்தவன் காலடி களைப்போல இருக்கின்றன அவை. அந்திப் பொழுதிலே, வலைஞர்கள் கடலிலே கண்டெடுத்த பவளக்கோவை போலிருக் கிறது உன் வாய், உனது உதடுகள்.... மோவாபியர்கள் சுரங்கங் களிலே கண்டெடுக்கும் குங்குமத்தைக் காட்டிலும் சிவந்தன உன் உதடுகள். குங்கும வண்ணம் தடவி, பவளத்தை ஒரு மூலையிலே தொங்கவிட்டிருக்கும் பாரசீக மன்னன் வில்லைப்போல இருக் கிறது உன்வாய். உன்னுடைய வாயைப்போலச் சிவந்த பொருள் உலகில் எதுவும் இல்லை.... அதை முத்தம் இடுகிறேன்.

**சோகனான் :**

கூடாது, பாபிலோன் குமாரியே, சோடாம் புதல்வியே; தள்ளிப்போ.

**சலோம் :**

எப்படியாவது உனது வாயிதழை முத்தம் இடுவேன். ஆம் முத்தம் இட்டே தீருவேன், சோகனான்.

**சிரியா இளைஞன் :**

இளவரசி, இளவரசி, நறுமணப் பூங்காவாக விளங்கும் நீங்கள், குயில்கள் எல்லாவற்றையும் காட்டிலும் மேலான குயி லாக விளங்கும் நீங்கள் அவனைப் பார்க்காதீர்கள் பார்க்காதீர்கள், இவ்வகையில் அவனுடன் பேசாதீர்கள், இதைப் பொறுக்க முடிய வில்லை. இளவரசி, இதுபோல அவனுடன் பேசாதீர்கள்.

**சலோம் :**

சோகனான், நான் உன்னை முத்தம் இடப் போகிறேன்.

**சிரியா இளைஞன் :**

ஆ, ஐயோ! (அவன் தற்கொலை செய்துகொண்டு, சலோ மிற்கும் சோகனானுக்கும் இடையே வீழ்கிறான்)

**மன்னியின் பணியாள் :**

*சிரியா வாலிபன் தற்கொலை செய்துகொண்டான்! காவலர் தலைவன் மாய்ந்தான்! என் அன்பன் மறைந்தான்! வெள்ளிக்கடுக் கனையும் நறுமணப்பேழையையும் அவனுக்குப் பரிசாக அளித்தேன். அவனோ, தற்கொலை செய்துகொண்டான். ஏதாவது மாறுபாடு நேரும் என்று அவன் முன்னமே கூறினான் அல்லவா? அதைப்போலவே நடந்திருக்கிறது. நிலவு ஒரு பிணத்தைத் தேடி அலைந்தது என்பது மட்டும் எனக்குத் தெரியும். ஆனால், அது காவலர் தலைவனுடைய பிணத்தைத் தேடியலைந்தது என்பது எனக்குத் தெரியாதே! ஐயோ, நிலவுக்குத் தெரியாமல் அவனை ஒளித்திருக்கலாகாதா நான்?*

**முதல் வீரன் :**

*இளவரசியே, காவலர் தலைவன் தற்கொலை செய்து கொண்டான்.*

**சலோம் :**

*சோகனான், உன்னுடைய இதழ்களை முத்தமிடுகிறேன்.*

**சோகனான் :**

*நீ அஞ்சவில்லையா? காலதேவன், அரண்மனையிலே சிறகு அடித்துக்கொண்டிருக்கும் ஒலி கேட்கிறது என்று உனக்குச் சொல்லவில்லையா, நான்?*

**சலோம் :**

*உனது வாயை முத்தம் இடுகிறேன், சோகனான்!*

**சோகனான் :**

*பாபிலோன் குமாரியே, உன்னைக் காத்து காப்பாற்றக்கக் கூடிய மெய்ப்பொருளைப் பற்றியே நான் பேசினேன். போ, அவனைத் தேடு, அந்தப் மெய்ப்பொருள், தேவர் தேவன், கலீலி கடலிலே ஒரு படகிலே அமர்ந்து தொண்டர்களுடன் பேசிக்*

கொண்டிருக்கிறான், கரையருகே மண்டியிட்டுக் குனிந்து, பெயர் சொல்லி அவனை அழை. அவன் உன்னருகே வரும்போது திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி, உனது பாவங்களை மன்னிக்கும்படியாகக் கேட்டுக்கொள்.

**சலோம் :**

உனது வாயை முத்தம் இடுகிறேன்.

**சோகனான் :**

தொலைவிலே போ, பாபிலோன் புதல்வியே விலைமகளின் குமாரியே, தள்ளிப்போ.

**சலோம் :**

சோகனான், உனது இதழ்களை முத்தமிடுவேன்.

**சோகனான் :**

உன்னைப் பார்க்க எனக்கு விருப்பம் இல்லை. சலோம், அருவருக்கத்தக்க உன்னை நான் பார்க்கமாட்டேன். (அவன் போய்விடுகிறான்)

**சலோம் :**

உனது வாயை முத்தம் இடுவேன். ஆம், முத்தம் இடுவேன்.

**முதல் வீரன் :**

நாம் பிணத்தை வேறோரிடத்திற்குக் கொண்டுபோக வேண்டும். மன்னன் தன் கையால் இறந்தவர்களைத் தவிர மற்றவர்களுடைய உடல்களைக் காண விரும்புவதில்லை.

**மன்னியின் பணியாள் :**

அவன் என் உடன்பிறந்தோன்; உடன்பிறந்தோனைக் காட்டிலும் நெருங்கிய உறவு. மாலைவேளையிலே ஆற்றங் கரைப் பக்கமாக நடந்து போவோம் நாங்கள். அப்போது அவன்

தன் தேயத்தைப்பற்றி சொல்லுவான், அவன் எப்போதுமே மெது வாகப் பேசுவான், குழல் ஓசையைப் போல இருக்கும் குரல், ஆற்றிலே தோன்றும் எதிரொளியை ஆவலுடன் நோக்குவான்.

**இரண்டாவது வீரன் :**

நீ சொல்லுவது உண்மை. பிணத்தை ஒளித்து வைக்க வேண்டும். அரசன் அதைப் பார்ப்பது சரியன்று.

**முதல் வீரன் :**

அரசர் இங்கே வரவா போகிறார்? அவர் மாடிக்கு வருவதே இல்லை. அவருக்கு முற்றுணர்ந்த அறிவாளியிடம் மிக்க அச்சம். (அரசனும் அரசியும் அவையோர்களும் வருகிறார்கள்)

**மன்னன் :**

சலோம் எங்கே ? இளவரசி எங்கே ? நான் விருந்திற்கு வரச்சொன்னேனே, ஏன் வரவில்லை? ஆ, அதோ அங்கே இருக் கிறாள்!

**மன்னி :**

நீங்கள் அவளைப் பார்க்கக்கூடாது. நீங்கள் எப்போதும் அவளையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**மன்னன் :**

இன்று வெண்ணிலா பார்ப்பதற்கு வியப்பாகத் தோன்று கிறது. காதலர்களைத் தேடி நாலாபுறமும் அலையும் வெறிபிடித்த மங்கையைப் போலத் தோன்றுகிறது. அது அம்மணமாக, முற்றிலும் அம்மணமாகவே இருக்கிறது. அதற்கு உடையுடுத்த முயலுகின்றன கருமுகில்கள். ஆனால் அதுவோ, அவர்கள் கையில் அகப்படாமல் தப்பி ஓடுகிறது. அது நீலவானிலே பிறந்த மேனியாகக் காட்சி அளிக்கிறது. அது மதுவருந்திய மங்கையைப் போல முகில்களுக்கிடையிலே சுளிந்து நெளிந்து செல்லுகிறது. அது காதலர்களைத் தேடி அலைகிறது என்பதில் ஐயமில்லை, அது வெறிபிடித்த பெண்ணைப்போலத்தானே இருக்கிறது?

**மன்னி :**

இல்லை, நிலா நிலவைப்போலவே இருக்கிறது. நாம் உள்ளே போவோம்......... இங்கே நமக்கு என்ன வேலை?

**மன்னன் :**

நான், இங்கேயே இருப்பேன். மானசே, இங்கே கம்பளங் களை விரி, விளக்குகளை ஏற்று, தந்த மேசைகளைக் கொண்டுவா. இங்கே காற்று மனமகிழ்ச்சியாக இருக்கிறது. விருந் தினர்களோடு சேர்ந்து இன்னும் அதிகமாக மது அருந்துவேன். சீசருடைய தூதர்களுக்கு எல்லாவகையான மரியாதையும் செய்ய வேண்டும்.

**மன்னி :**

நீங்கள் அவர்களுக்காகவா இங்கே இருக்கிறீர்கள்?' அல்ல.

**மன்னன் :**

ஆம். காற்று மனம் மகிழ வீசுகிறது. எரோதிபாசு வா, விருந்தினர் நமக்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றனர். ஆ, கால் நழுவிவிட்டது! குருதியிலே கால் வழுக்கிவிட்டது. இது திக்குறி பெரிய திக்குறி இங்கே குருதி படிந்திருப்பதற்குக் காரணம் என்ன? ... இந்தப் பிணம்... இது யார்? ...விருந்தினர்களுக்கு உணவு அளிக்காமல் பிணத்தைக் காட்டுவானே எகிப்திய மன்னன் அவனைப்போல என்று என்னையும் நினைத்துக் கொண்டார் களா! இது யாருடைய உடல்?

**முதலாவது வீரன் :**

அரசே, அவன் நம்முடைய காலவர் தலைவன், மூன்று நாளைக்கு முன்னால் தாங்கள் காவலர்களுக்குத் தலைவனாக அமர்த்திய அதே சிரியா இளைஞன்.

**மன்னன் :**

நான் அவனுக்குத் சாத்தண்டனை விதிக்கவில்லையே!

**இரண்டாவது வீரன் :**

தற்கொலை செய்து கொண்டான், மாமன்னா!

**மன்னன் :**

காரணம் என்ன ? நான் அவனைத் தலைவனாக அமர்த்தினேனே!

**இரண்டாவது வீரன் :**

அரசே, எங்களுக்குத் தெரியாது. ஆனால் அவன் தற்கொலை செய்து கொண்டான் என்பது மட்டும் தெரியும்.

**மன்னன் :**

வியப்பாக, இருக்கிறது! உரோமானிய மெய்யறிஞர்கள் மட்டுமே தற்கொலை செய்துகெள்ளுவார்கள் என்று நான் நினைத்தேன். உண்மைதானே, திசெல்லினசு, உரோமானிய அறிஞர்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள் அல்லவா?

**திசெல்லினசு :**

ஆம், அரசே! அதுபோல் சிலர் இருக்கிறார்கள், முரடர்கள்.

**மன்னன் :**

தற்கொலை செய்துகொள்ளுவது எள்ளத் தக்கதாகும்.

**திசெல்லினசு :**

உரோமானியர்கள் அவர்களைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். மாமன்னர் அவர்களைக் கிண்டல் செய்து ஒரு பாட்டு புனைந்திருக்கிறார். அதை எங்கும் பாடுகிறார்கள்.

**மன்னன் :**

ஆ, பாட்டு புனைந்திருக்கிறாரா? சீசர் அருமையானவர். அவர் எல்லாம் செய்வார் .......... சிரியா இளைஞன் தற்கொலை செய்துகொண்டது வியப்பு. அவன் இறந்துபோனதற்காக நான் வருந்துகிறேன், ஆம் மிகவும் வருந்துகிறேன். அவன் பார்ப்பதற்கு

மிக்க பேரழகன்: மிகமிக எழிலன். கவர்ச்சி மிகுந்த கண்கள். அவன் இளவரசினை ஆவலாகப் பலமுறை நோக்குவான். அவன் இளவரசியைச் சற்று அதிகமாகவே பார்ப்பது வழக்கம்.

**எரோதியாசு :**

அவன் மட்டுமா? இளவரசியை அதிகமாகப் பார்ப் பவர்கள் இன்னும் எத்தனையோ பேர்.

**மன்னன் :**

அவனுடைய தந்தை ஓர் அரசன். நான் அவனை நாட்டி லிருந்து துரத்தினேன். அரசியாக இருந்த அவனுடைய அன்னையை நீ அடிமையாக்கிக் கொண்டாய். ஆகவே இங்கு எனது விருந்தினனாக இருந்தான் அவன். நான் காவலர் தலைவ னாக அமர்த்தினேன். இப்போது மறைந்தான், உயிர் துறந்தான், நான் வருந்துகிறேன்...... ஆ, பிணத்தை ஏன் இங்கே போட்டிருக் கிறீர்கள்?.... என்னால் கண் கொண்டு பார்க்க முடிவில்லை. கொண்டுபோங்கள் அப்பால் கொண்டுபோங்கள். (பிணத்தை எடுத்துக் கொண்டு போகிறார்கள்) இங்கே குளிர் அதிகமாக இருக் கிறது. காற்று பலமாக வீசுகிறது அல்லவா?

**மன்னி :**

காற்றைக் காணோமே!

**மன்னன் :**

அல்ல, காற்று வீசுகிறது......... வானில் சிறகு அடிக்கும் ஓசையும் கேட்கிறது. ஆம், வலுவான ஓசை கேட்கிறது. கேட்க வில்லையா, உனக்கு?

**மன்னி :**

ஒன்றையும் காணோமே!

**மன்னன் :**

இப்போது அந்த ஓசையைக் காணோம். ஆனால், சற்று நேரத்திற்கு முன்பு கேட்டேன். அது காற்று இரைச்சலாயிருக்கும்

என்பதில் ஐயம் இல்லை. அது மறைந்தது... இல்லை, இல்லை... மீண்டும் அதோ.. அதோ (காதுகொடுத்துக் கேட்கிறான்) உனக்குக் கேட்கவில்லையா? சிறகு அடித்துக்கொள்ளுவது போன்ற ஓசை.

**மன்னி :**

ஒன்றையும் காணோம். உங்களுக்கு உடம்பு ஒழுங்கில்லை போலும், உள்ளே போவோம்.

**மன்னன் :**

இல்லை, எனக்கு உடல்நலக் கேடு இல்லை; உன்னுடைய மகளுக்குத்தான் நோய். அவளுடைய முகத்தைப் பார். மிகவும் வெளிறி இருக்கிறது.

**மன்னி :**

அவளைப் பார்க்கக் கூடாது என்று உங்களிடம் சொல்ல வில்லையா?

**மன்னன் :**

கிண்ணத்திலே மது ஊற்று (மதுவைக் கொண்டுவருகிறாள் மன்னி) சலோம், இங்கே வா, என்னுடன் கொஞ்சம் மது அருந்து. இது வெகு இனிமையான மது. சீசரே எனக்காக அனுப்பி இருக் கிறார். உனது சிவந்த மெல்லிய உதடுகளை இந்த மதுவிலே தோய்த்துக்கொள்.

**சலோம் :**

எனக்கு வேட்கை இல்லை, அரசே!

**மன்னன் :**

அவள் என்னவாக விடை சொல்லுகிறாள், பார்த்தாயா? உன்னுடைய மகள் சொல்லுவதைக் கேட்டாயா?

**மன்னி :**

அவள் சொல்லுவது சரி. நீங்கள் ஏன் எப்பொழுதும் அவளையே பார்க்கிறீர்கள்?

**மன்னன் :**

பழுத்த பழங்கள் கொண்டு வாருங்கள், (பழங்களைக் கொண்டு வருகிறார்கள் வேலைக்காரர்கள்) சலோம், வா, என்னுடன் பழம் சாப்பிடு.... பழத்தில் கொஞ்சம் கடித்துக்கொள் மீதியை நான் தின்கிறேன்.

**சலோம் :**

எனக்குப் பசி இல்லை, அரசே.

**மன்னன் :**

(மன்னியிடம்) பார்த்தாயா, இவ்வளவு அழகாக வளர்த்தி ருக்கிறாய், உன் மகளை?

**மன்னி :**

நானும் என் மகளும் மன்னர் மரபிலே தோன்றியவர்கள்: நீங்களோ? உங்கள் தந்தை ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்தார் அவர் கொள்ளைக்காரருங்கூட.

**மன்னன் :**

பொய்! பொய்!

**மன்னி :**

நான் சொல்வது உண்மையென்பது உங்களுக்கே தெரியும்

**மன்னன் :**

சலோம், வா! என் பக்கத்தில் உட்கார். உன்னுடைய தாய் உட்காரும் அரியணையை உனக்குத் தருகிறேன்.

**சலோம் :**

அரசே, எனக்குக் களைப்பு இல்லை.

**மன்னி :**

உங்களைப்பற்றி அவள் என்ன நினைக்கிறாள், பார்த்தீர் களா?

**மன்னன் :**

எங்கே அதைக் கொண்டு வாருங்கள் ! ஆ, என்ன அது? மறந்து போனேனே..... ஆ.... நினைவு வந்தது.

**அறிவனுடைய குரல் :**

''காலம் வந்து விட்டது. நான் சொன்னது நிகழப்போகிறது' என்று வானகத் தந்தை கூறுகிறார்.

**மன்னி :**

பேசாமல் இருக்கச் சொல்லுங்கள், அவனை. அவனுடைய குரலைக் கேட்கப் பொறுக்க முடியவில்லை. அவன் எப்பொழுதும் என்னைப்பற்றியே பழித்துக் கொண்டிருக்கிறான்.

**மன்னன் :**

உன்னைப் பற்றி அவன் எதுவும் சொல்லவில்லையே! அவன் ஒரு பெரிய தீர்க்கதரிசி.

**மன்னி :**

முற்றுணர்ந்தோர்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை, எதிர் காலத்தில் நடக்கப்போவதை யாரால் சொல்ல முடியும்? ஒருவராலும் முடியாது. நிற்க அவன் எப்பொழுதும் என்னைப் பழிக்கிறான். நீங்களும் அவனைக்கொண்டு அச்சப் படுகிறீர்கள் அல்லவா?

**மன்னன் :**

அவனிடம் எனக்கு அச்சம் இல்லை, யாரிடமும் எனக்கு அச்சம் இல்லை.

**மன்னி :**

அவனைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அச்சம் இல்லை என்றால், அவனை யூதர்கள் வயம் ஒப்புவிப்பதற்கு என்ன?

**ஒரு யூதன் :**

அரசே, அவனை எங்கள் வயம் ஒப்புவித்து விடுவது நல்லது.

**மன்னன் :**

போதும், இந்தப் பேச்சு! இதற்கு முன்னமே பதில் சொல்லி இருக்கிறேன். முற்றுணர்ந்தோனை உங்கள் வயம் ஒப்புவிக்க மாட்டேன். அவன் மேன்மையானவன். அவன் கடவுளைக் கண்ணால் கண்டவன்.

**ஒரு யூதன் :**

கண்டிருக்க முடியாது. இலியாசு அறிவனுக்குப் பின்னால் ஆண்டவனைக் கண்டவர்கள் நிலவுலத்தில் இல்லை. இனி, இந்தக் காலத்திலே கடவுள் யாருக்கும் காட்சி அளிப்பதில்லை, அவர் யாருடைய கண்ணிலும் படாமல் மறைந்திருக்கிறார். அதனால், தேயத்திலே மறம் மலிந்திருக்கிறது.

**மற்றொரு யூதன் :**

உண்மையாகவே இலியாசு பகவானைக் கண்டாரா என்பது ஐயமே. ஒருவேளை அவர் தேவனின் நிழலைக் கண்டிருக்கலாம்.

**மூன்றாவது யூதன் :**

கடவுள் ஒரு போதும் மறைந்திருப்பதில்லை. எல்லாக் காலத்திலும் எல்லாப் பொருள்களிலும் அவர் தோன்றுகிறார். அவர் நல்ல பொருள்களில் இருப்பதுபோலவே தீயபொருள்களிலும் இருக்கிறார்.

**நான்காவது யூதன் :**

அப்படிச் சொல்லலாமா? அது மிகவும் இடர்ப்பாடான மெய்மை அலெக்சாந்திரிய கல்லூரிகளில் இதுபோன்ற கருத்தைக் கற்பிக்கிறார்கள்.

**ஐந்தாவது யூதன் :**

கடவுளின் போக்கை யாரால் சொல்லமுடியும்! அது மிகவும் மறைபுதிரானது. நாம் மறம் என்று நினைப்பது அறமாக இருக்கலாம. நாம் அறம் என்று நினைப்பது மறமாக இருக்கலாம். எதைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. நாம் எல்லா வற்றையும் கடவுளுக்கு அளித்துவிட வேண்டும். ஏனெனில், அவர் மிக்கவல்லவர். வலியவர்களையும் மெலியவர்களையும் ஒரே நிலையில் அழிவு செய்கிறார். அவர் ஒரு மனிதனையும் பொருட்படுத்துவது இல்லை.

**ஐந்தாவது யூதன் :**

நீர் சொல்லுவது உண்மை. கடவுள் அஞ்சத்தக்கவர். உரலிலே தானியத்தை அரைப்பதுபோல, அவர் வலியவர்க ளையும் மெலியவர்களையும் ஒன்றேபோல் அழிவு செய்கிறார். ஆனால் இவன், இந்த சோகனான், கடவுளைக் கண்டதே இல்லை. இலியாசு அறிவனுக்குப் பின்னால், பகவானைக் கண்ட வர்கள் யாருமே இல்லை.

**மன்னி :**

சரி, பேசாமல் இருங்கள், எனக்குக் களைப்பாக இருக் கிறது.

**மன்னன் :**

இந்த சோகனான் தான் உங்களுடைய காலனாகிய இலியாசு என்று சொல்லுகிறார்களே!

**யூதன் :**

அது சரியில்லை. அவர் மறைந்து முன்னூறு ஆண்டுக்ள் ஆகிறதே!.

**அறிவனுடைய குரல் :**

காலம் வந்துவிட்டது. ஆண்டவன் குறித்த காலம் வந்து விட்டது. உலகம் காப்பவன் குன்றங்களிலே நடந்துவரும் ஓசை கேட்கிறது எனக்கு.

**மன்னன் :**

உலகு காப்பவனா? அப்படி என்றால்?

**திசெல்லினசு :**

அது சீசருக்கு வழங்கும் ஒரு பட்டம்.

**மன்னன் :**

ஆனால் சீசர் சூதியாவிற்கு வரப்போவதில்லை? நேற்றுத் தான் உரோமிலிருந்து மடல்கள் வந்தன. இது தொடர்பாக ஒரு சொல் அதில் இல்லையே! மாரி காலத்தின்போது உரோமில் இருந்தாயே, திசெல்லினசு, சீசர் வருகையைப்பற்றி ஏதாவது கேள்விப்பட்டாயா?

**திசெல்லினசு :**

நான் எதுவும் கேள்விப்படவில்லை, அரசே! உலகு காப்பவர் என்பது சீசருடைய பட்டங்களில் ஒன்று.

**மன்னர் :**

சீசர் இங்கே வரமுடியாது அவருக்கு முடக்கு நோய் அதிகம். அவருடைய கால்கள் யானைக் கால்கள்ளைப்போல இருக் கின்றன என்று சொல்லுகிறார்கள். தவிர, அரசாங்க வேலைகள் இருக்கின்றன. அவர் வரமாட்டார். ஆயினும் அவர் தெய்வத் தன்மை வாய்ந்தவர். நினைத்தால் வரலாம், ஆனால் அவர் வரு வாரென்று நான் நினைக்கவில்லை.

**முதல் நாசரீன் :**

முற்றுணர்ந்தோன், சீசரைப் பற்றிப் பேசவில்லை.

**எரோத்து :**

சீசரைப்பற்றி இல்லையா?

**முதல் நாசரீன் :**

ஆம், அரசே!

**மன்னன் :**

*அப்படியானால், வேறு யாரைப்பற்றி?*

**முதல் நாசரீன் :**

நிலவுலகில் தோன்றிய தெய்வ குமாரனைப்பற்றி.

**ஒரு யூதன் :**

தெய்வகுமாரன் இன்னும் தோன்றவில்லை.

**முதல் நாசரீன் :**

அவன் தோன்றிவிட்டான், அவன் உலகம் எங்கும் அற்புதம் இயற்றி வருகிறான்.

**மன்னி :**

ஆ ஆ! அருள் விளையாடலா! எனக்கு அருள்விளையாடல் நம்பிக்கை இல்லை. நான் எத்தனையோ புதுமைகளைப் பார்த்திருக்கிறேன்.

(ஏவலாளை நோக்கி) விசிறி கொண்டுவா.

**முதல் நாசரீன் :**

இந்த அறிவன் உண்மையாகவே புதுமை நிகழ்த்தி வருகிறான். கலீலி நகரிலே நடந்த ஒரு திருமணத்திலே நீரை மதுவாக மாற்றினான். அங்கே போயிருந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். தொட்ட நொடியிலே, இரு தொழுநோயாளிகளைக் குணப்படுத்தினான்.

**இரண்டாம் நாசரீன் :**

அவனால் குருடர்களுக்கும் பார்வை வந்தது. மலைகளிலே தேவதைகளுடன் பேசியிருக்கிறான்.

**ஒரு சடுசியன் :**

தேவதைகள் இல்லை.

**ஒரு பாரிசியன் :**

தேவதைகள் இருக்கின்றன. ஆனால், அறிவன் சோகனான் அவற்றுடன் பேசினான் என்பதை நான் நம்பவில்லை.

**முதல் நாசரீன் :**

அவன் மலைமுடிகளிலே தேவதைகளுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பெருந் திரலான மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

**ஒரு சடுசியன் :**

தேவதைகளுடன் இல்லை.

**எரோதியாசு :**

ஆ! என்னென்ன பேசுகிறார்கள் இவர்கள்! மிக்க களைப்பை உண்டாக்குகிறார்களே! (பணியாளனை நோக்கி) விசிறி, விசிறி! (பணியாளன் விசிறியைக் கொடுக்கிறான்) கனவு கண்டவனைப் போல இருக்கிறதே உன் முகம், கனவு காணாதே. (விசிறியால் பணியாளனை அடிக்கிறான்.)

**இரண்டாவது நாசரின் :**

இன்னொரு புதுமை இருக்கிறது.

**மன்னி :**

இவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. நிலவினை வெகுநேரம் பார்த்துக்கொண்டு இருந்தார்கள் அல்லவா?

**முதல் நாசரீன் :**

சேருசுடைய புதல்வி இறந்துபோனாள், முற்றுணர்த்தோன் அவளை எழுப்பினான்.

**மன்னன் :**

செத்தவர்களையா பிழைக்கவைக்கிறான்?

**முதல் நாசரீன் :**

ஆம், அரசே!

**மன்னன் :**

இது எனக்குப் பிடிக்கவில்லை. செத்தவர்களைப் பிழைக்க வைப்பதைத் தடுக்கிறேன். இதை அவனிடம் சொல்லிவிடுங்கள். இப்போது அவன் எங்கே இருக்கிறான்?

**இரண்டாவது நாசரீன் :**

அரசே, எங்கும் எல்லா இடங்களிலும் அவன் இருக்கிறான். அவனைக் கண்டுபிடிப்பது தொல்லை.

**முதல் நாசரின் :**

அவன் இப்போது சமாரியாவில் இருக்கிறானாம்.

**ஒரு யூதன் :**

அவன் சமாரியாவில் இருந்தால், அவன் தேவதூதன் அல்லன். சமாரியர்கள் சாவிப்பிற்கு உள்ளானவர்கள். அவர்கள் திருக்கோயிகள்களுக்குக் காணிக்கை செலுத்துவது இல்லை.

**இரண்டாவது நாசரீன் :**

சில நாள்களுக்கு முன்னால், சமாரியாவிலிருந்த ஏதோ ஓர் ஊருக்குப் போனான். இப்போது செருசலேம் நகரத்திற்கு அருகில் இருக்கலாம்.

**முதல் நாசரீன் :**

இல்லை, அவன் அங்கே இல்லை, நான் இப்போதுதான் செருசலேமிலிருந்து வந்தேன். இரண்டுமாத காலமாக அவனைப் பற்றி யாதொரு தகவலும் இல்லை.

**மன்னன் :**

குற்றம் இல்லை, எங்கிருந்தாலும் சரி, கண்டுபிடியுங்கள், கண்டுபிடித்துச் செத்தவர்களை எழுப்பக்கூடாதென்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள். நீரை மதுவாக மாற்றுவது, குருடர் களுக்குப் பார்வை அளிப்பது.... இதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அவன் விருப்பம்போலச் செய்துகொள்

ளட்டும், நோயாளிகளை குணப்படுத்துவது எல்லாம் நல்லது தானே! ஆனால், செத்தவர்களைப் பிழைக்க வைக்க விட மாட்டேன். நான், மாண்டவர்களை மீண்டு வருவது, அச்ச முட்டுவது, மிகபெரு அச்சம்!

**அறிவனுடைய குரல் :**

பரத்தையே, விலை மகளே, பொன் விழிகளையும் பொன்-வெள்ளி இமைகளையும் உடைய, பாபிலோன் குமா ரியே! உன்னைப்பற்றி ஆண்டவன் என்ன சொல்லுகிறான், கேட்டாயா? ''ஏராளமான மக்கள் கூடட்டும், அவள் மீது கற்கள் வீசட்டும்''.

**மன்னன் :**

அவனுடைய வாயை மூடுங்கள்.

**அறிவனுடைய குரல் :**

படைத் தலைவர்கள் தங்கள் உடைவாளை உருவி அவனைக் குத்தட்டும். கேடயங்களுக்கு இடையில் அவளை வீழ்த்தட்டும்.

**மன்னி :**

இது அவதூறு, குற்றம், பெரும்பழி.

**அறிவனுடைய குரல் :**

இவ் வகையான, உலகத்திலுள்ள முறைகேட்டையும் தீமை யையும் ஒழிக்கப் போகிறேன். அவளைப் பார்த்து மற்ற பெண்களும் கெட்டுப்போக விடேன்.

**மன்னி :**

பார்த்தீர்களா, என்னைப்பற்றி அவன் என்ன சொல்லுகிறா னென்று. நான் உங்களுடைய மனைவி அன்றோ? என்னைப் பழிக்கும்போது பேசாமல் இருக்கலாமா?

**மன்னன் :**

அவன் உன்னுடைய பெயரைச் சொல்லவில்லையே.

**மன்னி :**

அதனால் என்ன? அவன் என்னைத்தான் பழிக்கிறான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும், நான் உங்களுடைய மனைவி இல்லையா?

**மன்னன் :**

ஆம், உண்மை, எரோதியாசு! என் அன்பே, நீ என் மனைவிதான் அதற்குமுன், என் அண்ணனுடைய மனைவியாக இருந்தாய்.

**மன்னி :**

நீங்கள்தாமே அவரிடமிருந்து என்னைக் கவர்ந்தீர்கள்.

**மன்னன் :**

ஆம், எனக்கு வலிமை இருந்தது, அதுவே உண்மை,...சரி அதைப்பற்றிப் பேச வேண்டா. அதிலே எனக்கு விருப்பம் இல்லை. என் அன்பே, விருந்தாளிகளை நாம் நன்கு கவனிக்கவில்லையே! அறிவனின் கொடிய சொற்களால், பின்னால் ஒரு எதிர்பாராத துன்பம் நமக்கு வரலாம். இப்போது கிண்ணத்தில் மதுவை ஊற்று, சீசர் பெருமானுக்கு உடல்நலம் அருளவேண்டுமென்று மது அருந்துகிறேன்... உன் மகளைப் பார்த்தாயா, மிகவும் வெளிறி இருக்கிறாளே!

**மன்னி :**

அவள் எப்படி இருந்தால் என்ன, உங்களுக்கு?

**மன்னன் :**

இதுபோல ஒரு முறைகூட நான் அவளைப் பார்த்தது இல்லை.

**மன்னி :**

*நீங்கள் அவளைப் பார்க்கக்கூடாது.*

**அறிவனுடைய குரல் :**

*அன்று செங்கதிர் கருங்கோளமாக விளங்கும், வெண் மதியம் குருதியைப் போலச் செக்கச் செவேலென்று இருக்கும். வானுலகிலே சுடர்விட்டு ஒளிரும் விண்மீன், அத்திப் பழங் களைப் போலப் பொல பொல வென்று மண்ணிலே உதிரும், மன்னர்கள் கலக்குவார்கள்.*

**மன்னி :**

*ஆ! வான்மதி சிவந்து, விண்மீன்கள் பழங்களைப் போலக் கீழே உதிரும் அந்த நாளைக் காண நான் விரும்புகிறேன். இந்த முற்றுணர்தோன் குடிகாரனைப்போலப் பேசுகிறான்.......... அவ னுடைய குரல் பொறுக்க முடியவில்லை. அவனை வாயை மூடச் சொல்லுங்கள்.*

**மன்னன் :**

*அவன் சொல்லுவது விளங்கவில்லை. இது பின்வரும் நிகழ்ச்சிக்கு அறிகுறியாக இருக்கலாம்.*

**மன்னி :**

*தீக் குறிகளிலே எனக்கு நம்பிக்கை இல்லை. அவன் குடிகா ரனைப்போலப் பேசுகிறான்.*

**மன்னன் :**

*ஆம், அவன் தெய்வ மதுவைக் குடித்திருக்கலாம்.*

**மன்னி :**

*தெய்வ மதுவா! அது எங்கே கிடைக்கிறது? எந்தத் தொழிற் சாலையிலே உண்டாக்குகிறார்கள்?*

**மன்னன் :**

*(சலோமைப் பார்த்துக்கொண்டே)* திசெல்லினசு, நீ உரோமில் இருந்தபோது, கோவேந்தன் அது தொடர்பாக ஏதாவது சொன்னாரா?

**மன்னி :**

எது பற்றி வேந்தே?

**மன்னன் :**

எது பற்றியா? ஆ, மறந்துவிட்டேன், உன்னிடம் ஏதோ கேட்டேன் அன்றோ?

**மன்னி :**

நீங்கள் மீண்டும் என் மகளையே பார்க்கிறீர்கள். அவளைப் பார்க்கக்கூடாது. முன்னாலேயே சொல்லி இருக்கிறேன் அல்லவா?

**மன்னன் :**

நீ அதையே சொல்லுகிறாயேயொழிய வேறு ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறாயே!

**மன்னி :**

நான் மீண்டும் அதையே சொல்லுகிறேன்: என் மகளைப் பார்க்காதீர்கள், வாருங்கள், உள்ளே போவோம்.

**மன்னன் :**

சலோம், கொஞ்சநேரம் நடனம் ஆடேன்!

**மன்னி :**

முடியாது, அவளை நடனமாட விடமாட்டேன்.

**சலோம் :**

அரசே, நடனமாட எனக்கு விருப்பம் இல்லை.

**மன்னன் :**

சலோம், எரோதியாசு மகளே, எனக்காகக் கொஞ்ச நேரம் நடனமாடு.

**மன்னி :**

பேசாமலிருங்கள். அவளை விட்டுவிடுங்கள்.

**மன்னன் :**

சலோம், நீ நடனமாட வேண்டும், எனது ஆணை இது.

**சலோம் :**

முடியாது அரசே!

**மன்னி :**

(சிரித்துக்கொண்டே) பார்த்தீர்களா, உங்கள் ஆணைக்கு அவள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறாள் என்று.

**மன்னன் :**

சரி, அவள் நடனமாடினால் என்ன, ஆடாவிட்டால் என்ன? இன்றிரவு நான் பெருங்களிப்பாய் இருக்கிறேன், மிக்க மகிழ்ச்சியாய் இருக்கிறேன். இதுபோல ஒருமுறை கூட இதற்குமுன் உவகையாக இருந்தது இல்லை.

**முதல் வீரன் :**

மன்னன் முகத்திலே கவலைக்குறி தோன்றுகிறது அல்லவா!

**இரண்டாவது வீரன் :**

ஆம்.

**மன்னன் :**

நிலவுலகின் தலைவனையும் எல்லாப் பொருள்களின் இறைவனுமாகிய சீசர் பெருமான் என்னை மனமார விரும்புறார்.

பல புத்தம் புதிய பொருள்களை எனக்கு நன்கொடையாக அனுப்பி வைத்திருக்கிறார். அவர், எனது பகையாகிய காப்படோசியா மன்னனை உரோமுக்கு அழைப்பதாகவும் உறுதி கூறி இருக்கிறார். ஒருவேளை உரோமாபுரியிலே அவர் அந்த மன்னைக் கொல்லலாம். நினைப்பதை எல்லாம் செய்து முடிக்கக் கூடிய அனைத்தும் வல்லவர் அல்லவா அவர்? அவ்வாறு இருக் கையில் நான் மகிழ்ச்சியாகவும் களிப்புடனும் இருப்பதற்கு என்ன குறை? நான் உவகையோடு இருக்கிறேன். எனது இன்பத் திற்குக் குறுக்கே நிற்கக்கூடிய பொருள் எதுவுமே இல்லை.

**அறிவனுடைய குரல் :**

அவனை இந்த அரியணையிலே உட்கார வைப்பார்கள். அவன் சிவப்பு, செந்நில நிற உடைகளை அணிந்திருப்பான். கையிலே பொற்கிண்ணம் ஒன்று தாங்கி இருப்பான். அதில் அவனுடைய குற்றங்களும் களங்கங்களும் நிறைந்திருக்கும். தேவ தூதன் அவனைக் கொல்லுவான். அவனுடைய பிணத்தைப் புழுக்கள் தின்னும்.

**மன்னி :**

உங்களைப் பற்றித்தான்! கேட்டீர்களா? என்ன சொல்லு கிறான் என்று! உங்கள் பிணைத்தைப் புழுக்கள் தின்னுமாம்.

**மன்னன் :**

என்னைப்பற்றி இல்லை. என்னைப்பற்றி ஒரு சொல்கூட அவன் பேசவதில்லை. என் எதிரியாகிய காப்படோசியா மன்ன னைப்பற்றியே அவன் பேசுகிறான். அவனைத்தான் புழுக்கள் உண்ணும், என்னையன்று. அண்ணியைக் திருமணம் செய்து கொண்டதன் மூலம் பெரும் தீங்கு செய்துவிட்டேன் என்பதைத் தவிர, எனக்குப் பகையான இந்த முற்றுணர்ந்தோன் ஒன்றுமே சொல்லுவதில்லை. உன்னைக் திருமணம் செய்துகொண்டது தொடர்பாக அவன் சொல்வது சரியாக இருக்கலாம் நீ மலடியாக இருப்பதே அதற்குச் சான்று.

**மன்னி :**

நானா? மலடி நானா? எப்பொழுதும் என் மகளையே உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் நீங்களா இப்படிச் சொல்லுவது? இது தவறு; எனக்கு ஒரு குழந்தை இருக்கிறது. உங்களுக்கோ ஒரு குழந்தை கூட இல்லை. நீங்கள் தான் மலடு, நான் இல்லை.

**மன்னன் :**

போதும், பெண்ணே! நீ மலடிதான், நான் சொல்லுகிறேன். உன்னிடமிருந்து எனக்கு ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லையே! நமது திருமணம் முறையான திருமணம் அல்லவென்று முற்றுணர்ந்தோன் சொல்லுகிறான். பழியான இந்தத் திருமணத்தின் மூலம் பெருந் தீமைகள் விளையும் என்று அவன் கூறுகிறான்.... அது சரியோ, என்னவோ? எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி இப்பொழுது பேசுவதற்கு நேரம் இல்லை. கொஞ்ச நேரமாவது மகிழ்ச்சியோடு இருப்பேன். உண்மையில் இப்போது பெருமகிழ்ச்சியோடு இருக்கிறேன். எனக்கு ஒரு குறையும் இல்லை.

**மன்னி :**

சரி, நேரமாகிறது. உள்ளே போவோம். சீசரின் தூதர்களுக்கு அனைத்துச் சிறப்புகளும் செய்யவேண்டும் அல்லவா?

**இரண்டாவது வீரன் :**

மன்னரின் முகத்திலே கவுலைக்குறி தோன்றுகிறது, அன்றோ?

**முதல் வீரன் :**

ஆம். உண்மைதான்

**மன்னன் :**

சலோம், சலோம், கொஞ்சநேரம் நடனமாட மாட்டாயா? உன்னைக் கெஞ்சுகிறேன். இன்றிரவு எனக்குக் கவலையாக இருக்கிறது. நான் இங்கே வந்தபோது குருதியிலே கால் வழுக்கிவிட்

டது. அது ஒரு தீக் குறி. அது ஒருபுறமிருக்க, வானத்திலே கருமை யான சிறகு ஒலி என் காதில் விழுந்தது. அதற்கு என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை....இன்றிரவு எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. ஆகையால், சற்றுநேரம் நடனமாட மாட்டாயா? சலோம், நீ கேட்டதைக் கொடுக்கிறேன். ஆள் நிலத்தில் பாதியை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். கொஞ்ச நேரம் நடன மாடமாட்டாயா?

**சலோம் :**

(எழுந்து) நான் கேட்பதைக் கொடுப்பீர்களா? உண்மை யாகவா?

**மன்னி :**

சலோம், வேண்டா, நடனமாடாதே.

**மன்னன் :**

எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன். மாநிலத்தில் பாதி வேண்டுமானாலும் தருகிறேன்.

**சலோம் :**

உண்மையாகவா, அரசே?

**மன்னன் :**

மெய்யாக, சலோம்.

**மன்னி :**

சலோம் வேண்டா, நடனமாடாதே.

**சலோம் :**

ஆணையிட்டுச் சொல்லுங்கள்.

**மன்னன் :**

எனது உயிர்மேலும், செங்கோல்மேலும், தேவதை களின்மேலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீ விரும்புவதைத்

கொடுக்கிறேன்,. ஆள்நிலத்தில் செம்பாதி வேண்டுமானாலும் அளிக்கிறேன். எனக்காகச் சற்றுநேரம் நடனமாடு, சலோம், சலோம். அருள் செய்.

**சலோம் :**

அரசே, வாக்குக் கொடுத்துவிட்டீர்கள்.

**மன்னன் :**

ஆம், சலோம்.

**சலோம் :**

நான் கேட்பது எல்லாம். ஆள்நிலத்தில் பாதிகூட - கொடுப்பீர்கள்?

**மன்னன் :**

ஆம். ஆள்நிலத்தில் பாதிகூட, சலோம் மாநிலத்தில் பாதி பெற்றால் வனப்பு மிகுந்த அரசியாவாய். ஆ! இங்கே, மிகவும் குளிராக இருக்கிறது. காற்று வேறு... வானிலே... வானிலே சிறகு ஒலி கேட்கிறது. இதற்குக் காரணம் என்ன? ஆ, ஒரு பறவை, பெரிய கரும் பறவை, மாடத்தின்மேல் இறகை விரித்துக் கவிந்திருப்பது போலத் தோன்றுகிறது. இந்தப் பறவை.... என் கண்ணுக்கு ஏன் தோன்றவில்லை! அதனுடைய சிறகு ஒலி அஞ்சத்தக்கதாக இருக்கிறது. குளிர்காற்று வீசுகிறது. குளிர் இல்லை, வெப்பமாக இருக்கிறது. மூச்சுத் திணறுகிறது. கையிலே கொஞ்சம் தண்ணீர் ஊற்றுங்கள். எனது மேலங்கியை அவிழ்ந்து விடுங்கள். விரைந்து விரைந்து........வேண்டா அப்படியே இருக்கட்டும். மலர் மாலை குத்துகிறது. மலர்கள் நெருப்பைப்போலச் சுடுகின்றன. (மாலையைப் பிடிங்கி ஏறிகிறான்)......இப்பொழுது முச்சுவிட முடிகிறது. அதன் இதழ்கள் எவ்வளவு சிவந்திருக்கின்றன. அவை ஆடையிலே படிந்திருக்கும் அரத்தக் கறைகளைப் போல இருக்கின்றன. அதனால் நமக்கு என்ன? நாம் பார்க்கும் ஒவ்வொரு பொருளிலும் அறிகுறிகளைத் காண்பது சரியில்லை.

அதனால் வாழ்க்கை கடுமையாகிறது. குருதிக் கறைகள் செம்மலர் இதழ்களைப்போல சிவப்பாக இருக்கின்றன என்று சொல்லுவதே சரி... சரி, அதைப்பற்றி எல்லாம் இப்போது ஏன் பேச வேண்டும்?... இப்போது நான் இன்பமாக இருக்கிறேன், இன்பமாக இருப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. இல்லைவா? உன் மகள் இப்போது நடனமாடப் போகிறாள். சலோம், நீ நடனமாடுவாய் அல்லவா?

**மன்னி :**

சலோம், வேண்டா, நான் சொல்வதைக் கேள்.

**சலோம் :**

அரசே, நடனமாடுகிறேன்.

**மன்னன் :**

உன் மகள் சொல்லுவதைக் கேட்டாயா? அவள் இப்போது நடனமாடப் போகிறாள். சலோம், நீ நடனமாடப் போவதைப் பற்றி மிகவும் மகிழ்ச்சி. நடனமாடியதன் பின் உனக்கு வேண்டியதைக் கேள். மறந்துவிடாதே. பாதி ஆள்நிலமானாலும் சரி, வாக்குக்கொடுத்திருக்கிறேன், அல்லவா?

**சலோம் :**

ஆம் வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள்.

**மன்னன் :**

சொன்ன சொல்லிலிருந்து நான் தவறியது இல்லை. உண்மையிலிருந்து விலகியதில்லை நான், பொய் சொல்ல எனக்குத் தெரியாது. நான் சொன்ன சொல்லுக்கு அடிமை, அதிலும் நான் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் ஒரு மன்னவனின் சொல். காப்படோசியா அரசன்தான் பொய்சொல்லுவது வழக்கம். அவன் முறையான அரசன் அல்லன். அவன் ஒரு கோழை, எனக்கு அவன் ஏராளமாகக் கடன் தரவேண்டும். ஆனால், அவன் எங்கே கொடுக்கப்போகிறான்? அவன் என் தூதர்

களை மானக்கேடு செய்திருக்கிறான். மனத்தைப் புண்படுத்தும் சொற்களைப் பேசி இருக்கிறான் அவன். அவன் உரோமிற்கு வரும்போது சீசர் அவனைக் கொன்றுவிடுவார். சீசர் அவனைக் கொல்லுவது உறுதி, இல்லாவிட்டால், அவனைப் புழுக்கள் அரித்துத் தின்றுவிடும், முற்றுணர்ந்தோன் சொன்னது உண்மைதான். உண்மை, சலோம், ஏன் காலந்தாழ்த்துகிறாய்?

**சலோம் :**

நடன உடைகளைக் கொண்டுவருமாறு வேலைக்காரர்களிடம் சொல்லியிருக்கிறேன். அதற்காகவே காத்துக்கொண்டிருக்கிறேன் (வேலைக்காரர்கள் வருகின்றனர்.)

**மன்னன் :**

வெறுங் காலுடனா நடனமாடப்போகிறாய்! சரி, உனது மெல்லிய சிற்றடிகள் வெண்புறாக்களைப் போன்றிருக்கின்றன, அவை மரங்களின் மேல் நடனமாடிக்கொண்டிருக்கும் வெண் மலர்களைப்போல இருக்கின்றன. இல்லை, இல்லை, அவள் குருதியின் மேல் நடனமாடப்போகிறாள். நிலத்திலே குருதி சிந்தி இருக்கிறது. நீ அரத்தத்தின்மேல் நடன மாடக்கூடாது இது ஒரு தீக் குறி.

**மன்னி :**

உங்களுக்கு என்ன, அவள் அரத்தத்தின்மேல் நடனமாடினால்?

**மன்னன் :**

உங்களுக்கு என்னவா ?....... வெண்ணிலவைப் பார்! அது அரத்தத்தைப் போலச் சிவந்திருக்கிறது, ஆ, முற்றுணர்ந்தோன் கூறியது உண்மை, வானிலா அரத்தத்தைப்போலச் சிவக்கும் என்று அவன் கூறினானல்லவா ? நீங்கள் எல்லோரும் அதைக் கேட்டீர்கள், இப்போது பாருங்கள், நிலவு சிவந்திருக்கிறது.

**மன்னி :**

ஆம், மெய்தான்! விண்மீன்கள் பழுத்த கனிகளைப்போலப் பொல பொலவென்று கீழே உதிர்கின்றன. செங்கதிர் இருள் மயமாகி வருகிறது. நானில மன்னர்கள் அஞ்சுகின்றனர். உள்ளே போவோம், நீங்கள் உடல் நலமற்றிருக்கிறீர்கள், உங்களுக்கு மனக் கோளாறு என்று அவர்கள் உரோமாபுரியிலே சொல்லப் போகிறார்கள், வாருங்கள், உள்ளே போவோம்....

**அறிவனுடைய குரல் :**

ஏடாமிலிருந்து வந்திருக்கும் இவன் யார்? செந்நீல உடை அணிந்திருக்கும் இவன் யார்? பீடுடைய நடை நடந்து செல்லும் இவன் யார்? உனது உடை ஏன் சிவந்திருக்கிறது.?

**மன்னி :**

நாம் உள்ளே போவோம், அவனுடைய குரலைக் கேட்டு எனக்கு வெறி உண்டாகிறது. அவன் ஓயாமல் கத்திக்கொண்டிருக்கும் வரையில், என் மகள் நடனமாட விடமாட்டேன். நீங்கள் எப்போதும் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்வரை, அவளை நடனமாட விடமாட்டேன். சுருங்கக் கூறினால், அவளை நடன மாடவே விடமாட்டேன்.

**மன்னன் :**

வேண்டா, எழுந்திருக்கவேண்டா. எரோதியா, என் அன்பே, அதனால் என்ன பயன்? சலோம் நடனமாடாமல் நான் உள்ளே போகமாட்டேன். சலோம்! நடனமாடுகிறாயா?

**மன்னி :**

வேண்டா சலோம், வேண்டா.

**சலோம் :**

இதோ ஆடப் போகிறேன் (நடனமாடுகிறாள்).

**மன்னன் :**

வியப்பு! பெருவியப்பு! அரசியே பார்! சலோம், அருகே வா! உனக்கு வேண்டிய பரிசைக் கேள், நடன மங்கையர்களுக்கு நான் நிறையப் பணம் கொடுக்கிறேன். உனக்குப் பெரிய நன்கொடை அளிக்கிறேன், என்ன வேண்டும், சொல்.

**சலோம் :**

(குனிந்தவாறு) இப்போதே ஒரு வெள்ளித்தட்டில் .....

**மன்னன் :**

(சிரித்தவாறு) வெள்ளித் தட்டிலா? ஆம்! வெள்ளித் தட்டி லேயே! உம், வெள்ளித் தட்டிலே என்ன வேண்டும்? சலோம். அழகியே, யுதேப்பா மங்கையர்க்கரசியே, வெள்ளித் தட்டிலே என்ன கொண்டு வரச்சொல்ல வேண்டும்! சொல். வேண்டியதைக் கொண்டு வரச் சொல்லுகிறேன், என்னுடைய செல்வம் அனைத்தும் உன்னுடையதே, என்ன வேண்டும், சொல்.

**சலோம் :**

(எழுந்து) அறிவன் - முற்றுணர்ந்தோனின் தலை.

**மன்னி :**

ஆ, அப்படிக் கேள் மகளே!

**மன்னன் :**

வேண்டா, சலோம், வேண்டா. அம்மா, சொல்லுவதைக் கேளாதே. அவள் எப்பொழுது தீமையையே சொல்கிறள்.

**சலோம் :**

அம்மா சொல்லுவதை நான் பொருட்படுத்தவில்லை. என்னிச்சையாக நான் கேட்கிறேன். வெள்ளித்தட்டிலே அறிவன் சோகனான் தலைவேண்டும். மன்னன் நீங்கள் உறுதி செய்திருக் கிறீர்கள். சூளுரை செய்திருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடா தீர்கள்.

**மன்னன் :**

ஆம், தெய்வங்களறிய உறுதி செய்தேன், ஆனால் சலோம், உன்னைக் கெஞ்சுகிறேன்; வேறு எதையாவது கேள். நாட்டில் பாதி வேண்டுமானாலும் கொடுக்கிறேன், ஆனால் இது வேண்டா.

**சலோம் :**

அறிவன் சோகனுடைய தலையே வேண்டும்.

**மன்னன் :**

வேண்டா, அது எனக்குப் பிடிக்கவில்லை.

**சலோம் :**

உறுதி செய்துவிட்டீர்கள் அரசே!

**மன்னி :**

ஆம், உறுதி செய்துவிட்டீர்கள், எல்லோருக்கும் அது தெரியும்.

**மன்னன் :**

பேசாதே! நான் உன்னுடன் பேசவில்லை.

**மன்னி :**

நல்ல பரிசைக் கேட்டிருக்கிறாள் என் மகள். அறிவன் சோக னானின் தலை! அவன் என்மேல் பழிச் சொல் மாரி பொழிந்தான், என் மகள் என்னை விரும்புகிறாள். சலோம், விட்டுக் கொடாதே! அவர் உறுதி செய்திருக்கிறார்.

**மன்னன் :**

பேசாமலிரு, நான் உன்னிடம் பேசவில்லை.... சலோம், அமைதியாக ஆழ்ந்து எண்ணிப்பார். நான் ஒருபோதும் உன்னிடம் கடுமையாக இருந்ததில்லை. எப்போதும் உன்மேல் எனக்கு அன்பு அதிகம்... ஒருவேளை மிக அதிகமாகவே உன்னை விரும்பியிருக்கலாம். இதை மட்டும் கேட்காதே சோகனானின் தலைவேண்டுமென்று கேட்பது அஞ்சத்தக்க ஒன்று.. நீ எள்ளல் செய்கிறாயென்று கருதுகிறேன். வெட்டிய தலை பார்ப்பதற்குப்

அச்சமாக இருக்குமே. அத்தகைய பொருள்களைக் கன்னிப் பெண் பார்க்கக் கூடாது. அதிலே உனக்கு என்ன மகிழ்ச்சி உவகை இருக் கப்போகிறது? வேண்டா, அது வேண்டா. நான் சொல்லுவதைக் கேள், என்னிடம் ஒரு மரகதம் இருக்கிறது. வட்டமான பெரிய மர கதம், சீசர் அனுப்பிய மரகதம். அந்த மரகத்தைக் கண் முன்னாலே வைத்துப் பார்த்தாயானால், நெடுந்தொலைவில் நடப்பது எல்லாம் உனக்குத் தெரியும். உலகத்தினுள்ள எல்லா மரகதங் களைக் காட்டிலும் அது பெரிது. அது உனக்குப் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன். அதைக் கேள், கொடுக்கிறேன்.

**சலோம் :**

சோகனானுடைய தலையே வேண்டும்.

**மன்னன் :**

நான் சொல்லுவதைக் கேட்கவில்லையே! சலோம், கேள்,

**சலோம் :**

அறிவனின் தலை!

**மன்னன் :**

வேண்டா, வேண்டா, அது உனக்கு வேண்டா. இன்றைய மாலை முழுவதும் உன்னையே பார்த்துக் கொண்டு இருந்ததற் காக என் மனத்தை வருத்த விரும்புகிறாய். இன்றைய மாலை முழுவதும் உன்னை ஓயாமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது உண்மைதான். என்ன செய்வது? உன் பேரழகு என்னைக் கலக் கிற்று. உன் வனப்பைக்கண்டு என் மனம் துன்பத்தில் ஆழ்ந்தது. அதனாலேயே, உன்னை உற்றுநோக்கிக் கொண்டு இருந்தேன். இனிமேல் உன்னைப் பார்க்கவில்லை. மக்களையோ, பொருள்க ளையோ, நாம் கண்ணால் பார்க்கலாகாது, கண்ணாடியில் மட்டும் பார்க்கலாம், ஏனெனில், அது நிழல்களைத்தானே எதிரொலிக் கிறது.....மது. மதுவைக் கொண்டு வாருங்கள்.... நீர்வேட்கையை அடக்கிக் கொள்ளுகிறேன்.... சலோம், சலோம், இனி நாம் இரு

வரும் நண்பர்கள் வா. இங்கு வா!....என்ன சொல்லுகிறேன்... நினைவு இருக்கிறது. சலோம், அருகே வா, நான் சொல்வதைக் கேட்கிறாயோ! என்னவோ? ...எனது வெண்மயில்களைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அழகிய வெண்மயில்கள்! சைப்ரசு மரங்களுக்கிடையே களித்து உலவித் திரிகின்றன. அவற்றின் அலகுகள் பொன்மயமாக விளங்குகின்றன. அவை உண்ணும் தானியங்களும் பொன்மயமானவை, அவற்றின் பாதங்கள் சிவப்பு நிறமானவை, அவை வாயைத் திறந்து அகவும்போது, மழை பொழிகிறது. தோகையை விரித்து ஆடும்போது வானிலே திங்கள் உதயமாகிறது. இரண்டிரண்டாக, அவை மரங்களிடையே உலவுகின்றன. ஒவ்வொரு மயிலையும் காப்பதற்கு ஒரு வேலைக்காரன் இருக்கிறான். சிற்சில சமயம், மேலே கொஞ்ச உயரம் பறந்துவிட்டு பசுந்தரையில் உட்காரும். அதைப்போல, அழகிய பறவைகள் உலகிலேயே கிடையா. அதைப்போல அழகிய பறவைகள் வைத்திருக்கும் மன்னர்களும் உலகில் இல்லை. சீசரிடம்கூட இத்தகைய மயில்கள் இல்லை. ஐம்பது மயில்கள் கொடுக்கிறேன்-உனக்கு. நீ போகும் இடமெல்லாம் உன் பின்னாலேயே தொடரும், அங்கு நாற்புறமும் மயில்கள் சூழ நீ நடந்து சென்றால் முகில்களுக்கிடையில், வெண்மதியம் ஊர்ந்து செல்லுவது போல இருக்கும்....எல்லாவற்றையும் உனக்கக் கொடுக்கிறேன். நூறு மயில்கள் என்னிடம் இருக்கின்றன. அவை அனைத்தும் உனக்கே, வாக்குறுதிலிருந்து என்னைக் காப்பாற்று. (மதுவை அருந்துகிறான்)

**சலோம் :**

அறிவனுடைய தலையே வேண்டும்.

**மன்னி :**

அப்படிக் கேள். மகிழ்ச்சி!

**மன்னன் :**

ஏய்... பேசாமலிரு, எப்பொழுதும் ஏன் கத்துகிறாய்? இரை கண்ட விலங்குபோல ஏன் இரைக்கிறாய்? உனது குரல் எனக்கு

அயர்ச்சியை உண்டாக்குகிறது... சலோம். நீ என்ன கேட்கிறாய் என்பதை எண்ணிப்பார். இவன் கடவுளிடமிருந்து தோன்றி யவன், தூயவன், தெய்வத்தன்மை வாய்ந்தவன். அவனுடைய வாயிலிருந்து கொடிய சொற்கள் வெளியாகின்றன. பாலை வனத்தில் கடவுள் அவனுக்கு துணையிருந்ததைப்போல அரண் மனையிலும் அவனுக்குத் துணையாய் இருக்கிறார். கடவுள் அவ னுக்கு ஒத்தாசையாக இருக்கிறார். மேலும், அவன் இறந்தால், எனக்கு ஏதாவது துயரக்கேடு உண்டாகலாம்... இங்கு வந்த போதே. அரத்தத்தில் என் கால் வழுக்கிவிட்டது. சற்று நேரத்திற்கு முன்னால் வானத்திலே சிறகு ஒலி கேட்டது. இதெல்லாம் தீக் குறிகள் சலோம். எனக்கு ஏதாவது தீங்கே நேருவது நல்லதா உனக்கு?... நான் சொல்லுவதைக் கேள்.

**சலோம் :**

அறிவனின் தலையே வேண்டும்.

**மன்னன் :**

ஐயோ, நான் சொல்லுவதை நீ கவனிக்கவில்லையே! இங்கே பல அணிகலன்களை ஒளித்து வைத்திருக்கிறேன். உன் அன்னைகூட அதைப் பார்த்ததில்லை. அவை வெகு கிடைதற்கரி யவை, நான்கு வட முத்து ஆரம் ஒன்று என்னிடம் இருக்கிறது. அவை வெள்ளிக் கதிர்களிலே பதிந்திருக்கும் முழுமதிகளைப் போல இருக்கும். அவை, பொன் வலையிலே வீழ்ந்த ஐம்பது வெண்மதியங்கள் போன்றவை. அதை ஓர் அரசி அணிந்திருந்தாள். நீ அதை மார்பில் அணிந்து கொண்டால் பேரரசி போல் விளங் குவாய். என்னிடம் இரண்டு வகையான சிவந்த நீலக் கற்கள் இருக்கின்றன. ஒன்று கொடி முந்திரிச்சாற்றைப் போல் இருண்டி ருக்கிறது; நீர் கலந்து நிறப்பொலிவு பெற்ற மதுவைப்போல சிவந்திருக்கிறது மற்றொன்று. புலிக் கண்கள் போன்று இள மஞ்சள் நிறத்தில் சில கற்களும், காட்டுப் புறாவின் கண் களைப் போன்று வெண் சிவப்பில் சில கற்களும், பூனையின் கண்களைப் போல இளப் பச்சை நிறத்தில் சில கற்களும் இருக்கின்றன.

பளபளப்பான ஒளி வீசும் கற்களும், துயரம் உமிழும் கற்களும் என்னிடம் இருக்கின்றன. இறந்த பெண்ணின் கண்கள் போன்ற கோமேதகக் கற்களும் என்னிடம் உண்டு. கலைகள் மாறுந் தோறும், மாறுதல் அடையும் ஒளி விசும் நிலவு நீர் மல்கும் கற்களும், முட்டை வடிவில் நீலக்கற்களும், கருநெய்தல் மலர்கள் போன்ற கற்களும் என்னிடம் உண்டு. கற்களின் நெஞ்சில் கடல் அலையிடுகிறது. உள்ளே உறங்கும் நீல அலைகளில் வெண்மதி துன்புறுத்துவதில்லை. மஞ்சள் நிறமுற்ற மணிக் குவைகள், கடற் பச்சைக் கற்கள், செந்நிற மாணிக்கங்கள், இன்னும் பல வியப்புறு கற்களும் என்னிடம் உண்டு, நிமூதியா மன்னன் தீக்கோழியின் இறகுகளாலான ஒரு மேலாடையை அனுப்பியிருக்கின்றான் இந்தத் தீவுகளின் அரசன் மென்மையான கிளிச் சிறகுகளால் பின்னிய நான்கு அழகிய விசிறிகள் அனுப்பியதையும் வைத்திருக் கிறேன். தங்கப்பேழையில் மூன்று வைடுரீயக் கற்கள் வைத்திருக் கிறேன். என்னிடம் வேறொரு கிடைத்தற்கரிய கல் இருக்கிறது. அதனுள் ஒரு பெண் கூர்ந்து பார்ப்பதானது கேடு; அதனை இளைஞர்கள் பார்த்தாலும் துன்பம்தான். இந்தப் பரந்த உலகில் அதனைக்கொண்டு பல புதுமைகள் நிகழ்த்தலாம். அதை நெற்றி யில் அணிந்துகொள்பவர்கள், இல்லாத வியப்பார்வக் கற்பனை செய்து கொள்ளலாம். அவற்றைக் கையில் எடுத்துச் செல்வோர், பெண்களை மலடாகச் செய்துவிடலாம். இவை விலை மதிக்க முடியாத ஒப்பற்ற உயர்ந்த களஞ்சியங்கள். இவை மட்டிலுமல்ல, கருங்காலிப் பேழையில், நான் இரண்டு கிண்ணங்களில் அம்பர் வைத்திருக்கிறேன். அவை தங்க ஆப்பிளைப்போலவே இருக் கின்றன. யாராவது பகைவன் ஒருவன் இந்தக் கிண்ணங்களில் நஞ்சை ஊற்றிவிட்டால், அவை வெள்ளி ஆப்பிளாக மாறிவிடும். அம்பர் வைத்திருந்த பேழையில் கண்ணாடி பதித்த மிதியடிகள் வைத்திருக்கிறேன். 'சீர்' நாட்டிலிருந்து கொண்டுவந்த சிறந்த மென்பட்டும் என்னிடம் உண்டு. யூபிரிட்டீசு நகரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட, அரத்தச் சிவப்புக் கற்கள் பதித்த கை வளை யல்களும் என்னிடம் உண்டு. இவையெல்லாம் விலை மதிப்பற்ற

பொருள்கள். இதற்குமேல் என்னதான் வேண்டும். உனக்குத் தரு கிறேன். உனக்கு வேண்டியதைக் கேள். கொடுக்கிறேன். ஒரே ஒரு பொருளை மட்டும் கேட்காதே. ஓர் உயிரைமட்டும் காப்பாற்று.

**யூதர்கள் :**

ஓ!

**சலோம் :**

அறிவனின் தலையே வேண்டும்.

**மன்னன் :**

(சாய்ந்தவாறு) அவள் கேட்பதைக் கொடுத்துத் தொலை யுங்கள், தாயைப்போல்தானே இருப்பாள் மகளும். (முதல் வீரன் வருகிறான். அரசன் சாத் தண்டனைச் சின்னமாகிய கணையா ழியை அவனிடம் கொடுக்கிறான். வீரன் ஆழியைக் கொலை ஞனிடம் கொடுக்கிறான். கொலைஞனுக்கு அச்ச முண்டாகிறது) ஐயோ, ஏதோ ஒரு தீங்கு நிகழப்போகிறது இன்று. ஆ! நான் ஏன் உறுதி செய்தேன்......

**மன்னி :**

போற்றும் செயல் செய்தாள். என் மகள்.

**மன்னன் :**

இன்று ஏதாவது, முரண்பாடு நிகழப்போகிறது என்பதில் ஐயமில்லை.

**சலோம் :**

(கவனித்தவாறு) ஓர் அரவமும் இல்லை, எங்கும் அமைதி. இந்த மனிதன் அலறவில்லை, என்னை யாராவது கொல்ல வந்தால், நான் ஓலம் இடுவேன், சண்டை போடுவேன்... வெட்டு. நாமன்..... வெட்டு.... அமைதி, அஞ்சத்தக்க அமைதி. ஆ, நிலத்தில் ஏதோ விழும் ஓசை கேட்கிறது. அது கொலை ஞனின் வாள்படை. அவன் கோழை, ஆண்மை இல்லாதவன்.

முற்றுணர்ந்தோனைக் கொல்ல அவன் அஞ்சுகிறான், படைஞர் களை அனுப்புவோம். (மன்னியின் பணியாளைப் பார்த்து) இங்கே வா, நீ சிரியா இளைஞனின் நண்பன் அல்லவா? சரி, போ. படைஞர்களிடம் சொல்லி, மன்னவன் வாக்களித்த பொருளைக் கொண்டுவரச் சொல் (பணியாள் பின் வாங்கு கிறான், அவன் படைஞர்களிடம் சொல்லுகிறான்) ஏ, படைஞர் களே! அறிவனின் தலையைக் கொய்து வாருங்கள். (படைஞர்கள் பின் வாங்குகின்றனர்) அரசே, படைஞர்களுக்கு ஆணை யிடுங்கள். (கொலைஞன் வெள்ளித் தட்டிலே அறிவன் சோக னானின் தலையைக் கொண்டு வருகிறான். சலோம் ஆவலுடன் அதைப் பற்றிக் கொள்ளுகிறாள். எரோத்து மன்னன் முகத்தை மூடிக் கொள்ளுகிறான். மன்னி சிரிக்கிறாள். நாசரேயர்கள் மண்டி யிட்டுத் தொழுகை செய்கின்றனர்).

**சலோம் :**

ஆ உனது சிவந்த இதழை முத்தமிட விரும்பினேன்., நீ ஒப்புதல் தரவில்லை. இப்பொழுது என்ன செய்வாய்? முத்த மிடப் போகிறேன். நன்றாய்ப் பழுத்த கனியை ஆவலுடன் கடித்துத் தின்பதுபோல, உனது இதழ்களை பல்லால் கடிப்பேன். ஆம், சோகனான்!... இதோ முத்தமிடப் போகிறேன். ...ஆனால் சோகனான், கண் திறந்து என்னை ஏன் பார்க்கவில்லை? சீற்றமும் புறக்கணிப்பும் மிகுந்து பார்ப்பதற்குப் அஞ்சத்தக்கதாக இருந்த உனது கண்கள் இப்பொழுது ஏன் மூடியிருக்கின்றன? காரணம் என்ன? விழிகளைத் திற சோகனான்! என்னைப் பார்க்க ஏன் மறுக் கிறாய்? என்னைக் காண அஞ்சுகிறாயா? சிவந்த நாகப்பாம்பு போல நஞ்சை உமிழ்ந்துகொண்டிருந்த உனது நாக்கு ஏன் தூங்குகிறது? வியப்பாக இல்லையா. இது? அந்த வீரியன் பாம்பு, அசைவற்று இருப்பதற்குக் காரணம் என்ன?... நீ என்னை வெறுத்துத் தள்ளியாய். என்னைப் பழித்தாய். நான் யூதேயா நாட்டின் இளவரசி. மன்னி எரோதியாசின் மகள். என்னை விலை மாதினும் இழிவாகக் கருதினாய். நீ. ஆனால் சோகனான், நான் இன்னும் உயிர் வாழ்கிறேன். நீயோ, இறந்துபோனாய். உன்

தலை என் கையில் இருக்கிறது. இப்போது என் மனத்திற்கு உகந்தவாறு அதைப் பயன்படுத்தலாம். வானத்திலே பறக்கும் பறவைகளுக்கோ, தெருவில் போகும் நாய்களுக்கோ, அதை எறி யலாம் நான். நாய்கள் உண்டு மீந்ததைப் பறவைகள் உண்ணும். ஆ, சோகனான், நான் உன்னை மனமாரக் காதலித்தேன். மற்றவர் களைத் காணக்காண எனக்கு வெறுப்பு அதிகமாகிறது, நீ அழகன், எழிலாண்மையன். வெள்ளிக் குன்றின்மீது நிற்கும், தந்தத் தூண் போன்றது உன் உடல், அல்லி-மலர்களும் குயில்களும் நிறைந்தி ருக்கும் பூங்கா போன்றது அது. எழில் ஒளி நிறைந்த உனது உடலுக்கு இணையான பொருள் எதுவும் உலகில் இல்லை. உனது செறிந்து நெளிந்த தலைமுடி போன்ற கரும்பொருள் வேறு ஏதா வது உலகில் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சிவந்த உனது இதழ்களும் அவ்வாறே மின்னுகின்றன. அஃஆ, என்னை ஏன் பார்க்கவில்லை, சோகனான்! விண்ணகத்திலுள்ள தந்தையை நீ பார்த்திருக்கிறாய். ஆனால், என்னைப் பார்க்கவில்லை-ஒரு முறைகூட,. ஒருமுறை பார்த் திருந்தாலுங்கூட, என்மீது மையலுற் றிருப்பாய், ஐயோ! உன்மேல் எனக்கு எவ்வளவு காதல். இன்னும் உன்னைக் காதலிக்கிறேன். சோகனான்-உன்னையே, உன்னை மட்டுமே காதலிக்கிறேன். வேட்கை மிகுந்தேன், உனது அழகைப் பருகத் தவிக்கிறேன். பசி மிகுந்தேன், உனது மெய்யை உண்ணத் துடிக்கிறேன். கனிகளோ, மதுவோ எனது வேட்கையையும் பசி யையும் தணியா. நான் இப்போது என்ன செய்வது, கரைபுரண்டு வரும் வெள்ளமோ, கண்ணுக்கு எட்டின தொலைவு வரையில் நீர் படர்ந்திருக்கும் பேராழியோ எனது ஆவலைத் தீர்க்காது. நான் ஓர் அரசகுமாரியாக இருந்தும், நீ என்னை உதறித் தள்ளினாய், நான் ஒரு கன்னிப் பெண், நீ எனது கற்பை எடுத்துக் கொண்டு மறைந்தாய்.... ஆ, சோகனான், என்னைக் கண் திறந்து பாரேன், நீ ஒரு முறை பார்த்திருந்தால் என்னைக் காதலித்திருப்பாய்.

**மன்னன் :**

உனது மகள் கொடியவளினும் கொடியவள்; அவள் செய்தது பெருங்குற்றம்.

**மன்னி :**

*என் மகள் செய்த செயல் எனக்குப் பிடித்திருக்கிறது. இனி. நான் இங்கேயே இருக்கப்போகிறேன்.*

**மன்னன் :**

*(எழுந்தவாறு) பழிகாரி வா, நான் இனி இங்கிருக்க மாட்டேன். வா, போகலாம், ஏதாவது தீங்கு நிகழப்போகிறது என்பதில் ஐயம் இல்லை. மானசசே, இசாசார், ஒசியசு! விளக்கு களை அணையுங்கள். நான் எதையும் பார்க்கமாட்டேன். கண்கள் எதுவும் பார்க்க விடவும் மாட்டேன், விளக்குகளை அணை யுங்கள், நிலவினை மூடுங்கள், விண்மின்களை மறையுங்கள். அரசி எரோதியாசி, நாமும் அரண்மனையிலே ஒளிந்து கொள்வோம். எனக்கு அச்சமாய் இருக்கிறது. (பணியாளர்கள் விளக்குகளை அணைக்கிறார்கள். விண்மின்கள் மறைகின்றன. பேருருவமான ஒரு கருமேகம் ஊர்ந்து வந்து நிலவினை மூடிக் கொள்கிறது)*

**சலோம் :**

*சோகனான், நான் உன் வாயை முத்தமிட்டேன், உன் உத டுகள் கசக்கின்றன அரத்தத்தினாலோ?..... ஒரு வேளை அரத்தம் படிந்து அதுபோல் இருக்கிறதோ? ஒரு வேளை காதல் சுவையாக இருக்குமோ? காதல் கசக்கும் என்று சொல்லுவார்கள்: அதனால் என்ன? உனது இதழ்கள் முத்தமிட்டுவிட்டேன் அல்லவா? (சலோம் மீது ஓரளவு நிலாக்கதிர் படுகிறது).*

**மன்னன் :**

*(திரும்பி, சலோமைப் பார்த்துக் கொண்டே) கொல்லுங் கள், அவளைக் கொல்லுங்கள்!*

*(படைஞர்கள் ஓடிச்சென்று மன்னி எரோதியாவின் புதல் வியும் யூதேயா நாட்டு இளவரசியுமாகிய சலோம் மீது, கத்திகளை வீசிக் கொல்லுகின்றனர்.)*

★ ★ ★



# ஆசுகார் ஒயில்டின் சிந்தனைகள்

கலை ஒரு சின்னம்; ஏனெனில், மனிதனும் ஒரு சின்னம்தான். கலப்பில்லாத சுய வளர்ச்சியே, கலை மண்டிய வாழ்க்கையாகப் பரிமளிக்கும். சித்திரக்காரனுக்கு, உலகம் ஒரு கண்காட்சி; கவிஞனுக்கு, உலகம் ஒரு பாடல்; கவிஞன் பாடியே தீருவான்; சிற்பி வெண்கலத்திலே சிந்திக்கிறான்; சித்திரக்கார னுக்கு, தன் மன நிலைகளைக் காட்டும் கண்ணாடியாகவே உலகம் அமைந்து விடுகிறது.

சொல்லிலோ, வருணத்திலோ, இசையிலோ, சலவைக் கல்லிலோ, மனிதனும் அவனுடைய அரிய இலட்சிய உபதே சமும் மின்னிப் பொலிவுற்றே வெளிவருகின்றன.

☆ ☆ ☆

கலைஞன் வாழ்க்கையிலே, இயற்கையான எழில் இன்பம் ஊட்டி, அவன் வாழ்க்கையை உயிரோவியமாகவே மாற்றிவிடு கிறது. சூரியனும், சந்திரனும், பருவ எழிலும், இரவின் அகண்ட மௌனமும், காலைப் பட்சி ஜாலங்களின் இசையும், இலைகளி னூடே கொட்டுகின்ற மழையும், புல்லின்மேல் தவிழ்ந்து வரு கின்ற வெள்ளிப் பனித்துளிகளும், கலைஞனுக்கு அபூர்வமான இன்பத்தையும், சக்தியையும் ஊட்டுகின்றன. இயற்கையின் அழகை மறந்து வாழ்வது சரியல்லவே!

☆ ☆ ☆

ஷேக்ஸ்பியர், விக்டர் ஹ்யூகோ, தாந்தே, வால்டர் பேட்டர் எல்லோரும் சிறந்த கலையாவேசம் கொண்ட இலக்கிய மேதைகள்; வாழ்க்கையையும், இயற்கையையும், கலையையும், தத்துவத்தையும் புதிய முறையில் அருளாவேசத்துடன் சிருஷ்டி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளிலே, சிந்தனை மின்னலிலே, கவிதையின் திருக்கோலத்திலே, தியாக விளக்கத்

திலே, பாஷை மிகமிக உயரமாகவே உலகளாவி வளர்ந்து விட்டது. அவர்களுடைய ஆழ்ந்த சிந்தனைகள் நிகரற்ற சிந்தனைகள்; அவர்களுடைய சொற்கள், நிகரற்ற சொற்கள்.

☆ ☆ ☆

ஒவ்வொருவனும் தனிப்பட்ட முறையிலே சிந்திக்க வேண்டும். ஒருவனையொருவன் காப்பியடித்துக் கொண்டு வாழ்வதில் என்ன பிரயோஜனம். தானே தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்து முன்னேறினால் வாழ்க்கையின் ஆழ்ந்த அகண்ட பொருள் புரியும். காப்பியடித்துக் கதறுவதில், எவ்விதப் பயனுமில்லையே? நெஞ்சில் குத்திக்கொண்டு பாராமல் படித்து, புரியாமல் ஒப்புவிப்பதில் எவ்வித மன வளர்ச்சியும் கிடையாது? புதிய நூல்களைப் புதிய முறையிலே, தன் மனவளர்ச்சியை ஒட்டிச் சிருஷ்டிக்க முன்வரவேண்டும். அப்போதுதான், கலையும், கவிதையும், வாழ்க்கையும், இலட்சிய உறுதியும் முன்னேற்றமடையும். மனிதனை மனிதன் எதிரொலித்துக் கொண்டு வாழ்வதும், சிந்திப்பதும், மதியீனம். படித்த முட்டாள்களைவிட, படியாத அறிவிலிகளின் நெஞ்சிலே சில உண்மைகளை ஆழமாக விதைக்க இடமிருக்கிறது.

☆ ☆ ☆

மனிதனுக்கு வாழ்க்கையிலே வருகின்ற சோதனைகள் எல்லாம் சிறந்த உண்மைகளையே போதிக்கின்றன. துன்பமே துப்பாக்கியாக வெடித்தாலும், அதிலிருந்து சிதறி வருகின்ற வெடிப்புகையிலே, தியாகத்தின் ஒளி மின்னலிடுகிறது. கண்ணீர்க் கவிதையிலே உலகம் உண்மையை உமிழ்கிறது. துன்பத் தீயிலே, ஒருவன் தியாக மூர்த்தியாக ஒளிவீசுகிறான்.

☆ ☆ ☆

குழந்தையின் உடல், இறைவனின் உடல்; கவலையை மாற்றும் அகண்ட சக்தி குழந்தையின் மழலைக்கே உண்டு;

மனிதன் உலகத்தோடும், இறைவனோடும் பிணைக்கப்பட்டு நிற்பது, இந்த அரிய குழந்தைச் செல்வத்தால்தான், குழந்தைத் தொடர்பின்றி மனிதன் வாழமுடியுமா? முடியவே முடியாது!

☆ ☆ ☆

சோகச் சூறாவளியிலே, ஒருவன் இறைவனையே மணக் கின்றான்; சோகமே, ஒரு திருமணக் கோலம்தான். கடவுளையே காதலித்து நெருங்கும் நேரம். துன்ப உலகில்தான் அருமையாக வருகிறது. இதைக் கவிஞன் 'தாந்தே' அருளாவேசத்துடன் உணர்ந்தே பாடியிருக்கிறான்.

☆ ☆ ☆

பெரும் பாவங்கள் எல்லாம், மூளையிலேதான் உதயமா கின்றன; சிந்தனையே விஷமாக மாறிவிடுகிறது.

அன்பு, ஒரு அகண்ட சக்தி வாய்ந்தது; அன்பே, தெய்வத் தொடர்போடு உலகத்தின் இன்னல்களையும், ஏக்கத்தையும், ஏமாற்றத்தையும் திருத்திச் சுத்தம் செய்து மனித உள்ளங்களில் நன்மையை நாடும் இன்ப எழுச்சியைத் தூண்ட முன் வருகிறது.

☆ ☆ ☆

சிருஷ்டியில் எந்த ஜீவராசியும் பாஷையின் மூலம் பேச முயல்கிறது; ஒரு கலைஞனுக்கும், மொழியே முக்கியம்; என் பேனா முனையிலே, சிந்தனை திரவம்போலப் பாய்ந்தோடு கிறது. ஒவ்வொரு விருக்ஷமும், தன் வளர்ச்சியை இலையாலும், பூவாலும், கனியாலும் எழுதிக் காட்டவில்லையா? இதுதானே பாஷையின் வளர்ச்சியைக் காட்டும் இதய விசித்திரம்.

☆ ☆ ☆

விதியின் விபரீதத்திலே, உண்மை மின்னிப் புலம்பிக் கொண்டே வருகிறது. இதை உணரும், ஆற்றல், மனிதனுக்கு சந்தர்ப்ப ஒளியிலேதான் தெரிகிறது; கற்பனையின் உயரத்திலே

நின்று பார்த்தால், விதியின் விபரீத ஆழம் தெரியும். விதியின் பற்கள் கூர்மையானவை.

☆ ☆ ☆

கடலைக் கண்டால், கலங்கிய மனம் உடனே தெளியும்; கடலின் அகண்ட தோற்றத்திலே, மனவேதனை மாறுகிறது; உள்ளத்திலே சாந்தி நிலவ ஆரம்பிக்கிறது. சகல நோய்களும், கடல் காற்றிலே, பறந்தோடுகின்றன. அலையின் கர்ஜனையிலே, பாஷையின் மர்மம் தெரிகிறது. அலைப் புரட்சியிலே, விதியின் அகண்ட லீலைகள் விளையாடுகின்றன.

☆ ☆ ☆

இயற்கையோடு வாழவே நான் ஆசைப்படுகிறேன். இயற்கையே, என் இதயப் புண்ணை மாற்றும் மாமருந்தாகக் காட்சியளிக்கிறது. ஒரு சின்னஞ்சிறு பூ மொட்டில், வசந்தம் ஒளிந்து விளையாடும்; பூவின் வாயிலுள்ள வர்ணமும், சிப்பியில் தோன்றி வளரும் ரேகை எழிலும் என் இதயத்தைக் கொள்ளை கொள்கின்றனவே; ரோஜா இதழில், கண்ணீர்த்துளிகள் என்பால் கருணை கொண்டு, வழிந்தோடுகின்றனவே.

☆ ☆ ☆

ஆஸ்கார் ஒயில்டு சலோம்

